www.Padasalai.Net www.CBSEtips.in

# பெங்குயின்

புதிய வடிவில் சிறந்த வழிகாட்டி

புதிய பதிப்பு

# சமூக அறிவியல்

## 10

அரசு பொதுத் தேர்வு,
அரசு மாதிரித் தேர்வு
மற்றும்
PTA வினாக்களுக்கான
விடைகள்
இணைக்கப்பட்டுள்ளன



இணைப்பு

வரைபடப் பயிற்சி புத்தகம்

பெங்குயின் பப்ளிகேஷன்

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

FOR ORDERS CONTACT : 8248737898
www.Padasalai.Net www.CBSEtips.in

# பெங்குயின்

# சமூக அறிவியல்

# 10

"புதிய பாடத்திட்டத்தின் படி தயாரிக்கப்பட்டுள்ளது"

இலவசம்: வரைபடப் பயிற்சி புத்தகம்

பெங்குயின் பப்ளிகேஷன்ஸ்
ஸ்ரீவில்லிபுத்தூர்

விலை
ரூ.296/-

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in

# நூல் அறிமுகம்

மாணவச் செல்வங்களே பெங்குயின் பப்ளிகேசன் நிறுவனத்தாரால் வெளியிடப்பட்டுள்ள இந்த சமூக அறிவியல் துணைவன் தங்களின் மதிப்பெண் தேடலுக்கு வடிகாலாய் அமையும் என்பதில் எவ்வளவும் சந்தேகம் இல்லை.

இத்துணைவனை எழுதுவதற்கு எனக்கு வாய்பளித்த பெங்குயின் நிறுவனத்தாருக்கு மிக்க நன்றிகளை கூறிக்கொள்கிறேன். இத்துணைவன் உருவாக்குவதற்கு எனக்கு உறுதுணையாய் இருந்த எனது அண்ணன் V.யோகன் அவர்களுக்கு இத்தருணத்தில் நன்றியை கூறிக் கொள்கிறேன்.

இத்துணைவனை எனக்கு கல்விச் செல்வத்தை கொடுத்த என் பெற்றோருக்கு சமர்ப்பிக்கிறேன்.

இத்துணைவனின் ஏதேனும் குறையிருப்பின் அதைச்சுட்டிக் காட்டுமாரும், மேலும் இதை மெருகேற்றும் தங்களின் கருத்துகளை கூறுமாரும் தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி

இப்படிக்கு
நூல் ஆசிரியர்

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in

# நூல் கட்டமைப்பு

பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவச் செல்வங்களே நீங்கள் உங்கள் வாழ்க்கையை தேர்ந்தெடுக்கும் இடத்தில் இருக்குறீர்கள் பத்தாம் வகுப்பு மதிப்பெண் எந்தளவு உங்களது வாழக்கையை மாற்றப்போகிறது என்பதை நீங்கள் அறிந்து வைத்திருப்பீர்கள். அதற்கு தங்களின் கைகளில் தவழும் இந்தத் துணைவன் பெரும் உதவி புரியும் என்று உறுதியளிக்கிறோம்.

இத்துணைவன் தமிழ் நாடு அரசுப் பொதுத் தேர்வு சமூக அறிவியல் பாடத்திட்டப்படி வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்துணைவனின் எளிய மொழி நடை தங்களுக்கு ஒரு புதுவீத அனுபவத்தை கொடுக்கும் எளிதில் எவ்வித சந்தேசமும் இல்லை.

இத்துணைவனில் ஒரு மதிப்பெண் வினாக்கள், இரண்டு மதிப்பெண் வினாக்கள் மற்றும் ஐந்து மதிப்பெண் வினாக்கள் புத்தகத்தை தாண்டி பெருமளவு கொடுக்கப்பட்டுள்ளது.

நீங்கள் பாடத்தை புரிந்து கொள்ள வேண்டும் என்பதால் ஆங்காங்கே படத்துடன் விளக்கி இருப்பது இத் துணைவனின் தனிச்சிறப்பு

மேலும் வரைபடங்கள், தெளிவாகவும், மிகச்சரியாகவும் கொடுக்கப்பட்டுள்ளது இவை அனைத்தும் தங்களின் மதிப்பெண் வேட்கைக்கு சரியான தீர்வாக அமையும் என்று நம்புகிறோம்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in

# TO ORDERS

## SCHOOLS and TEACHERS

FOR ORDERS CONTACT 8925612359 8643007972 7010414574 8248737898

## STUDENTS

Books can be obtained through VPP

# PAYMENT METHOD

## DIRECT DEPOSIT

| | | |
|---|---|---|
| A/C Name | : | PENGUIN PUBLICATIONS |
| Our A/c No. | : | 328150050800129 |
| Bank Name | : | TAMIL NADU MERCANTILE BANK |
| IFSC | : | TMBL0000328 |
| Bank Brach | : | SRIVILLIPUTTUR. |

| | | |
|---|---|---|
| A/c Name | : | PENGUIN PUBLICATIONS |
| Our A/c No. | : | 39212649923 |
| Bank Name | : | STATE BANK OF INDIA |
| IFSC | : | SBIN0000921 |
| Bank Brach | : | SRIVILLIPUTTUR. |

**After Deposit, please call this no. 8925612359**

## MOBILE PAYMENTS

G Pay

**8925612359**

PENGUIN PUBLICATIONS

**By Any Payment APP**

## DEMAND DRAFT / CHEQUE

Please send Demand Draft / cheque in favour of **'PENGUIN PUBLICATIONS'** payable at **Srivilliputtur**

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

| அலகு | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| | வரலாறு | |
| 1 | முதல் உலகப்போரின் வெடிப்பும் அதன் பின்விளைவுகளும் | 1 |
| 2. | இரு உலகப்போர்களுக்கு இடையில் உலகம் | 14 |
| 3. | இரண்டாம் உலகப்போர் | 27 |
| 4. | இரண்டாம் உலகப்போருக்குப் பிந்தைய உலகம் | 37 |
| 5. | 19 ஆம் நூற்றாண்டில் சமூக சமய சீர்திருத்த இயக்கங்கள் | 48 |
| 6. | ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக தமிழகத்தில் நிகழ்ந்த தொடக்ககால கிளர்ச்சிகள் | 58 |
| 7. | காலனியத்துக்கு எதிரான இயக்கங்களும் தேசியத்தின் தோற்றமும் | 71 |
| 8. | தேசியம் : காந்திய காலகட்டம் | 80 |
| 9. | தமிழ்நாட்டில் விடுதலைப் போராட்டம் | 93 |
| 10. | தமிழ்நாட்டில் சமூக மாற்றங்கள் | 102 |
| | புவியியல் | |
| 1. | இந்தியா - அமைவிடம், நிலத்தோற்றம் மற்றும் வடிகாலமைப்பு | 113 |
| 2. | இந்தியா - காலநிலை மற்றும் இயற்கைத் தாவரங்கள் | 124 |
| 3. | இந்தியா - வேளாண்மை | 134 |
| 4. | இந்தியா - வளங்கள் மற்றும் தொழிலகங்கள் | 147 |
| 5. | இந்தியா - மக்கள் தொகை, போக்குவரத்து, தகவல் தொடர்பு மற்றும் வணிகம் | 158 |
| 6. | தமிழ்நாடு - இயற்கைப் பிரிவுகள் | 168 |
| 7. | தமிழ்நாடு - மானுடப் புவியியல் | 180 |
| | குடிமையியல் | |
| 1. | இந்திய அரசியலமைப்பு | 191 |
| 2. | நடுவண் அரசு | 200 |
| 3. | மாநில அரசு | 209 |
| 4. | இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை | 217 |
| 5. | இந்தியாவின் சர்வதேச உறவுகள் | 227 |


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in


| பொருளியல் | | | |
|---|---|---|---|
| 1. | மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் அதன் வளர்ச்சி : ஓர் அறிமுகம் | | 236 |
| 2. | உலகமயமாதல் மற்றும் வர்த்தகம் | | 245 |
| 3. | உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து | | 252 |
| 4. | அரசாங்கமும் வரிகளும் | | 260 |
| 5. | தமிழ்நாட்டில் தொழில் துறை தொகுப்புகள் | | 268 |
| வினா எண் | பின் இணைப்பு | மதிப்பெண் | பக்க எண் |
| 41 | காலக்கோடு | 5 | 276 |
| 42 | உலக (அ) இந்திய வரைபடம் | 5 | 279 |
| 44 | இந்தியா (அ) தமிழ்நாடு வரைபடம் | 8 | 285 |
| | அரசு மாதிரி வினாத்தாள் | | 325 |


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



வரலாறு

# அலகு 1 முதல் உலகப்போரின் வெடிப்பும் அதன் பின்விளைவுகளும்

## கற்றலின் நோக்கங்கள்

கீழ்க்காண்பனவற்றோடு அறிமுகமாதல்

- ஐரோப்பிய வல்லரசுகளிடையே பகைமையும் மோதல்களும் ஏற்படுவதற்கு இட்டுச் சென்ற காலனியாதிக்கப் போட்டி
- கிழக்கு ஆசியாவில் ஜப்பான் அதிக வலிமை மிகுந்த நாடாகவும் ஆக்கிரமிப்பு செய்யும் தன்மை கொண்ட நாடாகவும் மேலெழுதல்
- காலனியாதிக்கம் ஆப்பிரிக்காவின் மீது தாக்கத்தை ஏற்படுத்துதல்
- முதல் உலகப்போருக்கான காரணங்கள், போரின் போக்கு, விளைவுகள்
- வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையும் அதன் சரத்துக்களும்
- ரஷ்யப் புரட்சிக்கான காரணங்களும் அதன் போக்கும் விளைவுகளும்
- பன்னாட்டுச் சங்கம் உருவாக்கப்படுதலும் அதன் செயல்பாடுகளும் தோல்வியும்

## பாடம் சம்பந்தமான படங்கள்


டானென்பர்க் போர்


பதுங்குக் குழிப்போர்


லூசிடானியா கப்பல் மூழ்குதல்


பாரிஸ் அமைதி மாநாடு


1917 ஆம் ஆண்டுப் புரட்சி



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



## பாடநூல் வினாக்கள்

## I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

**1. முதல் உலகப்போரின் இறுதியில் நிலைகுலைந்து போன மூன்று பெரும் பேரரசுகள் யாவை?**

**அ) ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, உதுமானியர்**

ஆ) ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, ரஷ்யா

இ) ஸ்பெயின், போர்ச்சுக்கல், இத்தாலி

ஈ) ஜெர்மனி, ஆஸ்திரிய -ஹங்கேரி, இத்தாலி

**2. பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிவடையுந்தருவாயில் கிழக்கு ஆசியாவில் உதயமான வலிமை வாய்ந்த நாடு எது?**

அ) சீனா **ஆ) ஜப்பான்**

இ) கொரியா ஈ) மங்கோலியா

**3. "ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்" எனக் கூறியவர் யார்?** PTA-6 மே - 2022

**அ) லெனின்** ஆ) மார்க்ஸ்

இ) சன் யாட் சென் ஈ) மா சே துங்

**4. மார்ன் போர் எதற்காக நினைவு கூறப்படுகிறது?**

அ) ஆகாயப் போர்முறை **ஆ) பதுங்குக் குழிப்போர் முறை**

இ) நீர்மூழ்கிக் கப்பல் போர்முறை ஈ) கடற்படைப் போர்முறை

**5. பன்னாட்டுச் சங்கத்தின் முதல் பொதுச்செயலாளர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?**

**அ) பிரிட்டன்** ஆ) பிரான்ஸ்

இ) டச்சு ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

**6. பின்லாந்தைத் தாக்கியதற்காக பன்னாட்டுச் சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட நாடு எது?** செப் - 2021

அ) ஜெர்மனி **ஆ) ரஷ்யா**

இ) இத்தாலி ஈ) பிரான்ஸ்

| II. கோடிட்ட இடங்களை நிரப்புக. | விடைகள் |
|---|---|
| 1. ________ ஆம் ஆண்டில் ஜப்பான் சீனாவுடன் வலுக்கட்டாயமாகப் போரிட்டது. | 1894 |
| 2. 1913 ஆம் ஆண்டு மே மாதம் கையெழுத்திடப்பட்ட ________ உடன்படிக்கையின்படி அல்பேனியா எனும் புதிய நாடு உருவாக்கப்பட்டது. மே - 2022 | **லண்டன்** |
| 3. ________ ஆண்டில் ஜப்பான் இங்கிலாந்துடன் நட்பினை ஒப்பந்தம் செய்து கொண்டது. | 1902 |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



| | |
|---|---|
| 4. பால்கனில் ________ நாடு பல்வகை இனமக்களைக் கொண்டிருந்தது. | **மாசிடோனியா** |
| 5. டானென்பர்க் போரில் ________ பேரிழப்புகளுக்கு உள்ளானது. | **ரஷ்யா** |
| 6. பாரிஸ் அமைதி மாநாட்டில் பிரதிநிதியாகப் பங்கேற்ற பிரான்ஸின் பிரதமர் ________ ஆவார். | **கிளமென்சோ** |
| 7. ________ ஆம் ஆண்டில் லொக்கர்னோ உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது. **PTA-1** | 1925 |

## III. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.

1. i) துருக்கியப் பேரரசு, பால்கனில் துருக்கியரல்லாத பல இனமக்களைக் கொண்டிருந்தது.

   II) துருக்கி மைய நாடுகள் பக்கம் நின்று போரிட்டது.

   IIi) பிரிட்டன் துருக்கியைத் தாக்கி கான்ஸ்டாண்டி நோபிளைக் கைப்பற்றியது.

   iv) சூயஸ் கால்வாயைத் தாக்க துருக்கி மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டது.

   அ) i), II) ஆகியன சரி ஆ) i), IIi) ஆகியன சரி

   இ) iv) சரி **ஈ) i), II), iv) ஆகியன சரி**

---

2. கூற்று : ஜெர்மனியும், அமெரிக்காவும் மலிவான தொழிற்சாலைப் பொருள்களை உற்பத்தி செய்து இங்கிலாந்தின் சந்தையைக் கைப்பற்றின.

   காரணம் : இரு நாடுகளும் தங்கள் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப் பொருள்களை உற்பத்தி செய்தன.

   அ) கூற்று, காரணம் ஆகிய இரண்டும் சரி.

   **ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல.**

   இ) கூற்று, காரணம் ஆகிய இரண்டும் தவறு.

   ஈ) காரணம் சரி, ஆனால் கூற்று தவறு.

---

3. கூற்று : ஆப்பிரிக்காவில் குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்காக ஐரோப்பிய நாடுகள் மேற்கொண்ட முதற்கட்ட முயற்சிகள் ரத்தக்களரியான போர்களில் முடிந்தன.

   காரணம் : சொந்த நாட்டு மக்களிடமிருந்து கடுமையான எதிர்ப்பு இருந்தது.

   **அ) காரணம், கூற்று ஆகிய இரண்டும் சரி.**

   ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல.

   இ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு.

   ஈ) காரணம் சரி, ஆனால் கூற்று தவறு.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## IV. பொருத்துக.

| | I | | II | விடைகள் | |
|---|---|---|---|---|---|
| 1. | பிரெஸ்ட் - லிடோவஸ்க் உடன்படிக்கை | அ. | வெர்செய்ல்ஸ் | 1. | இ |
| 2. | ஜிங்கோயிசம் | ஆ. | துருக்கி | 2. | ஈ |
| 3. | கமால் பாட்சா | இ. | ரஷ்யாவும் ஜெர்மனியும் | 3. | ஆ |
| 4. | எம்டன் | ஈ. | இங்கிலாந்து | 4. | உ |
| 5. | கண்ணாடி மாளிகை | உ. | சென்னை | 5. | அ |

## V. சுருக்கமான விடையளிக்கவும்

**1. சீன - ஜப்பானியப் போரின் முக்கியத்துவத்தை நீ எவ்வாறு மதிப்பீடு செய்வாய்?**

- **சிறிய நாடான** ஜப்பான், சீனாவை இப்போரில் தோற்கடித்தது.
- இந்த வெற்றி உலகை **வியக்க வைத்தது.**
- லியோடங் தீபகற்பத்தை தன்னுடன் இணைத்துக் கொண்டதன் மூலம் **கிழக்காசியாவில் தானே வலிமை மிகுந்த அரசு** என்பதை ஜப்பான் மெய்பித்தது.

**2. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.** QY - 2019 HY - 2019 ஆகஸ்ட்-22

மூவர் கூட்டு நாடுகள் முறையே

- இங்கிலாந்து
- பிரான்ஸ்
- ரஷ்யா ஆகியவை ஆகும்.

**3. ஐரோப்பிய போர்க்குணம் வாய்ந்த தேசிய வாதத்தின் மூன்று வடிவங்கள் யாவை?** PTA-1 HY - 2019

- இங்கிலாந்தின் ஆரவாரமான நாட்டுப்பற்று
- பிரான்சின் அதிதீவிரப்பற்று
- ஜெர்மனியின் வெறி கொண்ட நாட்டுப்பற்று போன்றவைகளையே போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள் ஆகும்.

**4. பதுங்குக் குழி போர் முறை குறித்து நீங்கள் அறிந்ததென்ன?** செப் - 2021 PTA-3

- முதல் உலகப்போரில் பயன்படுத்தப்பட்ட **போர் யுக்தியே** பதுங்குகுழி போர் ஆகும்.
- எதிரிகளின் துப்பாக்கி குண்டுகளில் இருந்து தங்களை காத்துக் கொள்ள இந்த பதுங்கு குழிகள் உதவின.
- இக்குழிகள் **ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருப்பதால்** அவற்றின் வழியாக வீரர்களை எளிதில் தொடர்பு கொள்ள முடியும்.

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



**5. முஸ்தபா கமால் பாட்சா வகித்தப் பாத்திரமென்ன?**

- ❖ துருக்கியை **மீண்டும் ஒரு நாடாக மறுபிறவி** எடுக்க வைத்ததே பாட்சாவின் சாதனையாகும்.
- ❖ துருக்கிக்கு விடுதலையை பெற்றுத் தந்ததோடு மட்டுமல்லாமல், அதை **நவீனமயமாக்கியதும்** அவரே.
- ❖ உலகின் பார்வையில் துருக்கியின் **எதிர்மறையான அங்கீகாரத்தை** மாற்றி அமைத்தவரும் அவரே.

**6. பன்னாட்டுச் சங்கத்தின் தோல்விக்கான ஏதேனும் இரண்டு காரணங்கள் பட்டியலிடுக.** PTA-5

- ❖ சங்கத்திற்கென்று **தனியாக இராணுவம்** இல்லை.
- ❖ சங்கம் முதல் உலகப் போரில் **வெற்றி பெற்ற நாடுகளின் அமைப்பாகவே** செயல்பட்டது.

## VI. விரிவான விடையளிக்கவும்

**1. முதல் உலகப்போருக்கான முக்கியக் காரணங்களை விவாதி.** PTA-1 செப் - 2020 செப் - 2021 மே - 2022 அ.மா.தே-23

முதல் உலகப்போருக்கான காரணங்களை பின்வரும் தலைப்புகளாக வகைப்படுத்தலாம்.

அவை முறையே,

- ❖ ஐரோப்பிய **நாடுகளின்** அணிச்சேர்க்கை
- ❖ வன்முறை சார்ந்த தேசியம்
- ❖ ஜெர்மனியின் ஆக்கிரமிப்பு மனப்பாங்கு
- ❖ பால்கன் போர்கள்
- ❖ உடனடிக் காரணம்

**(அ) ஐரோப்பிய நாடுகளின் அணிச்சேர்க்கை**

- ❖ 1900-க்குப் பின்பு ஐரோப்பிய நாடுகள் தங்களது பாதுகாப்பின் பொருட்டு **இரண்டு பிரிவுகளாக** அணி சேர்ந்தன.
- ❖ மைய நாடுகள் என்று அழைக்கப்பட்ட அணியில் **ஜெர்மனி, ஆஸ்திரிய - ஹங்கேரி, இத்தாலி** போன்ற நாடுகள் இடம் பெற்றிருந்தன.
- ❖ நேச நாடுகள் என்று அழைக்கப்பட்ட அணியில் **இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா** போன்ற நாடுகள் இடம் பெற்றிருந்தன.
- ❖ இது போன்ற அணிச்சேர்க்கைகள் போருக்கு முதன்மை காரணமாயின.

**(ஆ) வன்முறை சார்ந்த தேசியம்**

- ❖ **"எனது நாடு சரியோ, தவறோ நான் அதை ஆதரிப்பேன்"** என்ற மனப்பாங்கு அக்கால கட்டத்தில் ஐரோப்பா எங்கும் பரவிக் கிடந்தது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



- இந்த மனப்பாங்கு தேசப்பற்றோடு நிற்காமல் **தீவிர தேசியமாக மாறி போர்** வெடிப்பதற்கு காரணமாய் அமைந்தது.

**(இ) ஜெர்மனியின் ஆக்கிரமிப்பு மனப்பாங்கு**

- ஜெர்மன் பேரரசர் இரண்டாம் கெய்சர் வில்லியத்தின் **"ஜெர்மனியே உலகின் தலைவன்"** என்ற மனப்பாங்கு போரை விரைவுபடுத்தியது.
- ஜெர்மனியின் ஆக்கிரமிப்பு மனப்பாங்கும், அது விரைவாக கட்டும் கடற்படைத் தளங்களையும் தனக்கு எதிரானதாகவே இங்கிலாந்து கருதியது.
- ஜெர்மனியோடு இங்கிலாந்து போட்டி போடவே போர் பதற்றம் அதிகரித்தது.

**(ஈ) ப்ரான்ஸ் ஜெர்மனியோடு கொண்ட பகை**

- ஜெர்மனியும், பிரான்சும் **ஜென்மப் பகை** கொண்ட நாடுகளாகும்.
- பிரான்ஸ்சை போரில் வென்ற ஜெர்மனி, அதன் வளமான பகுதிகளாக **அல்சேஸ் மற்றும் லொரைன்** பகுதிகளை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது.
- மேலும் மொராக்கோ விவகாரத்தில் ஜெர்மனியின் தலையீட்டை பிரான்ஸ் விரும்பவில்லை.
- இது இரு நாடுகளிடையே பகைமை உணர்வை மேலும் வளர்த்தது.

**(உ) பால்கன் போர்கள்**

- பால்கன் தீபகற்பத்தை 18-ஆம் நூற்றாண்டின் முதல் பாதி வரை துருக்கி தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது.
- 18-ம் நூற்றாண்டின் பிற்பாதியில் துருக்கியின் உறுதியற்ற அரசியல் சூழ்நிலையை பயன்படுத்தி பல பகுதிகள் துருக்கியின் கட்டுப்பாட்டில் இருந்து விலகின.
- விலகிய நாடுகள் சேர்ந்து **"பால்கன் கழகம்"** என்ற அமைப்பை ஏற்படுத்தி துருக்கியை தோற்கடித்தன.
- வென்ற பகுதிகளை **பிரித்துக் கொள்வதில் ஏற்பட்ட மனக்கசப்புகள்** ஐரோப்பாவில் போர் மேகங்கள் தோன்ற வழி வகுத்தன.

**(ஊ) உடனடிக் காரணம்**

- 1914-ஆம் ஆண்டு **ஆஸ்திரிய இளவரசர் பிரான்ஸ் பெர்டினாண்டு,** பாஸ்னியாவில் உள்ள **செராஜிவோ** என்ற இடத்தில் வைத்து பிரின்ஸப் என்ற **செர்பிய இளைஞனால்** சுட்டுக் கொல்லப்பட்டார்.
- இப்படுகொலையே முதல் உலகப்போருக்கு **உடனடிக் காரணமாக** அமைந்தது.

---

**2. ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை கோடிட்டுக் காட்டுக.** **PTA-2**

- ஜெர்மனியும், மைய நாடுகளும் **போர் இழப்பீட்டுத் தொகை** வழங்க வற்புறுத்தப்பட்டன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



- ❖ ஜெர்மனி இனி **1,00,000 படை வீரர்களைக் கொண்ட** படையை மட்டுமே வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டது.
- ❖ ஆஸ்திரியா மற்றும் ஜெர்மனி ஆகிய இரு நாடுகளின் **ஒருங்கிணைப்பு** தடை செய்யப்பட்டது.
- ❖ ஜெர்மனியின் காலனி நாடுகள் அனைத்தும் **பன்னாட்டுச் சங்கத்தின் கட்டுப்பாட்டில்** விடப்பட்டன.
- ❖ ரஷ்யாவுடனும், பல்கேரியாவுடனும் ஜெர்மனி மேற்கொண்ட உடன்படிக்கைகளை திரும்பப் பெற வலியுறுத்தப்பட்டது.
- ❖ அல்சேஸ் - லொரைன் பகுதிகள் பிரான்சிடமே திரும்பத் தரப்பட்டன.
- ❖ போலந்து மீண்டும் உருவாக்கப்பட்டது.

---

**3. லெனின்தலைமையிலான ரஷ்யப்புரட்சியின் போக்கினை விளக்குக.**

- ❖ 1917-ம் ஆம் ஆண்டு ரஷ்யாவை ஆண்டு கொண்டிருந்த **"சார்" மன்னர்களை** எதிர்த்து புரட்சி வெடித்தது.
- ❖ புரட்சியின் விளைவாக ஆட்சியமைப்பில் மாற்றம் ஏற்பட்டு **"மென்ஷ்விக்குள்"** என்று அழைக்கப்பட்டோரால் ஒரு தற்காலிக அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டது.
- ❖ தற்காலிக அரசாங்கமும் பல தவறான முடிவுகள் எடுக்கவே புரட்சி மீண்டும் வெடித்தது.

**லெனின் தலைமையேற்றல்**

- ❖ **"அனைத்து அதிகாரங்களும் சோவியத்திற்கே"** என்ற லெனினின் முழக்கம் சோவியத் தொழிலாளர்களையும், தலைவர்களையும் கவர்ந்தது.
- ❖ **"ரொட்டி, அமைதி, நிலம்"** என்ற முழக்கமும் மக்களை கவர்வதாய் அமைந்தது.
- ❖ மென்ஷ்விக் அரசாங்கத்தின் தோல்வி, லெனினின் தலைமையில் **"அக்டோபர் புரட்சிக்கு"** வழிவகுத்தது.
- ❖ லெனினின் வழிகாட்டுதலின் பேரில் புரட்சிக்கான விரிவான திட்டத்தை **"டிராட்ஸ்கி"** தயாரித்தார்.
- ❖ திட்டத்தின்படி அரசுக் கட்டிடங்கள், மன்னரின் குளிர்கால அரண்மனை, அரசு தலைமை அலுவலகங்கள் என அனைத்தும் புரட்சியாளர்களால் கைப்பற்றப்பட்டன.
- ❖ 1917-ஆம் ஆண்டு நவம்பர் 8-ஆம் நாள் அன்று லெனின் தலைமையிலான **புதிய கம்யூனிஸ்ட் அரசு** ஆட்சிப் பொறுப்பேற்றது.

---

**4. பன்னாட்டுச் சங்கத்தின் பணிகளை மதிப்பிடுக.** PTA-4

- ❖ பன்னாட்டுச் சங்கம் தொடங்கப்பட்ட 1920-ஆம் ஆண்டிலிருந்து சங்கம் பல சிக்கல்களைத் தீர்த்து வைத்துள்ளது. அவை முறையே,
- ❖ ஆக்லேண்டு தீவுகள் சிக்கல்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in


- ❖ சைலேஷியா எல்லை சிக்கல்
- ❖ கிரீஸின் ஆக்கிரமிப்பு சிக்கல்
- ❖ 1920-ஆம் ஆண்டில் பின்லாந்தும், சுவீடனும் சொந்தம் கொண்டாடிய ஆலோண்டு தீவை, பின்லாந்துக்கே சொந்தம் எனத் தீர்ப்பளித்து சிக்கலை தீர்த்து வைத்தது.
- ❖ போலந்திற்கும், ஜெர்மனிக்கும் இடையே ஏற்பட்ட சைலேஷிய எல்லைச் சிக்கல் சங்கத்தால் சுமூகமாக தீர்த்து வைக்கப்பட்டது.
- ❖ 1925-ம் ஆ்ணடு கிரீஸ், பல்கேரியா மீது போர் தொடுத்த போது சங்கம் தலையிட்டு போரை நிறுத்தி கிரீஸிடம் இருந்து போர் இழப்பீடு பெற்றுத் தந்தது.
- ❖ ஐரோப்பாவில் அமைதி ஏற்படக் காரணமாய் இருந்த “லொக்கர்னோ உடன்படிக்கை” கையெழுத்தானதற்கு சங்கத்தின் முயற்சியே காரணமாகும்.

## GMQ, PTA அரசு தேர்வு வினா விடைகள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**1. இத்தாலியப் படை எத்தியோப்பியப் படையால் தோற்கடிக்கப்பட்ட இடம்** செப்-2020

அ) டெல்வில்லி ஆ) ஆரஞ்சு நாடு **இ) அடோவா** ஈ) அல்ஜியர்ஸ்

### II. சுருக்கமாக விடையளிக்கவும்

**1. ரஷ்யப்புரட்சியின் உலகளாவிய தாக்கத்தினைக் கோடிட்டுக் காட்டுக.** செப்-2020

- ❖ உலக நாடுகளின் கற்பனையை தூண்டியது.
- ❖ பல நாடுகளில் கம்யூனிச அரசுகள் உருவாக்கப்பட்டன.
- ❖ ரஷ்ய கம்யூனிஸ்ட் அரசு காலனி நாடுகளின் விடுதலைக்கு போராட ஊக்குவித்தது.
- ❖ நிலச்சீர்திருத்தம், சமூக நலன், தொழிலாளர் நலன், பாலினசமத்துவம் போன்றவை உலகளவில் பரவியது.

**2. வெர்செயில்ஸ் உடன்படிக்கையின் ஏதேனும் இரு சரத்துக்களை எழுதுக** PTA-6

- ❖ போரை தொடங்கிய ஜெர்மனி குற்றவாளி என்பதால், போர் இழப்பீட்டுத் தொகை கட்ட வலியுறுத்தப்பட்டது.
- ❖ ஜெர்மனியின் படை 1,00,000 வீரர்கள் மட்டும் கொண்டதாக சுருக்கப்பட்டது.
- ❖ ஜெர்மனியின் வசம் இருந்த அதன் காலனி நாடுகள், பன்னாட்டுச் சங்கத்தின் பாதுகாப்பு நாடுகளாக மாற்றப்பட்டன.


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



## III. விரிவான விடையளிக்கவும்

**1. பன்னாட்டுச் சங்கத்தின் அமைப்பு மற்றும் உறுப்புகள் பற்றி விவரிக்கவும்** மே -2022

1. பன்னாட்டுச் சங்கத்திற்கான கூட்டு ஒப்பந்த ஆவணம் பாரிஸ் அமைதி மாநாட்டில் தயார் செய்யப்பட்டது.
2. சவால்கள் நிறைந்த இப்பணி குடியரசுத் தலைவர் உட்ரோவில்சன் கொடுத்த அழுத்தத்தால் நிறைறேியது.
3. இவ்வமைப்புக்கான அரசியலமைப்பு விதிகளை உருவாக்கியதில் இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளில் ஆலோசனை மேலோங்கியிருந்தது.
4. 1920ல் தொடங்கப்பட்டது.

**பன்னாட்டுச் சங்கத்தின் உறுப்புகள்**

❖ பொதுச்சபை, செயற்குழு, செயலகம், பன்னாட்டு நீதிமன்றம் பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு

❖ பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகள் தொடக்கத்தில் இச்சபையின் நிரந்தர உறுப்பினர்களாக இருந்தது.

❖ பன்னாட்டு சங்கத்தின் செயலகம் ஜெனிவாவில் அமைக்கப்பட்டது.

❖ பன்னாட்டு நீதிமன்றம் திஹேக்கில் அமைக்கப்பட்டது.

❖ பதினைந்து நீதிபதிகளைக் கொண்டிருந்தது.

## கூடுதல் வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்க**

**1. முதல் உலகப்போரின் மிகப் பெரும் விளைவு**

(அ) பிரெஞ்சுப்புரட்சி **(ஆ) ரஷ்யப்புரட்சி**

(இ) உடமைகள் இழப்பு (ஈ) பொருட்சேதம்

**2. அக்டோபர் புரட்சியால் யாருடைய ஆட்சி தூக்கி எறியப்பட்டது?**

**(அ) சார்மன்னர்** (ஆ) லூயிக்கள்

(இ) பூர்போன்கள் (ஈ) கெய்சர்

**3. இளம் துருக்கியர் புரட்சி நடைபெற்ற ஆண்டு**

(அ) 1906 (ஆ) 1907

**(இ) 1908** (ஈ) 1909

**4. இலண்டன் உடன்படிக்கையின்படி உருவான புதிய நாடு**

(அ) ஸ்காட்லாந்து (ஆ) செனகல்

(இ) துருக்கி **(ஈ) அல்பேனியா**

**5. ஜுட்லாண்ட் போரில் வெற்றி பெற்ற நாடு**

**(அ) இங்கிலாந்து** (ஆ) ப்ரான்ஸ்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



(இ) ஜெர்மனி (ஈ) அமெரிக்கா

**6. லூசிடானியா எந்த நாட்டுக் கப்பல்**

**(அ) அமெரிக்கா** (ஆ) ஜெர்மனி

(இ) ரஷ்யா (ஈ) ப்ரான்ஸ்

**7. பன்னாட்டுச் சங்கத்தில் உறுப்பினர் ஆகாத நாடு**

(அ) ரஷ்யா (ஆ) ஜெர்மனி

(இ) ப்ரான்ஸ் **(ஈ) அமெரிக்கா**

**8. பன்னாட்டு நீதிமன்றத்தில் நீதிபதிகளின் எண்ணிக்கை**

(அ) 10 **(ஆ) 15**

(இ) 20 (ஈ) 25

**9. கீழ்கண்டவற்றில் எது தவறானது?**

(அ) 1933-ல் ஜெர்மனி பன்னாட்டு சங்கத்தில் இருந்து விலகியது.

**(ஆ) ரஷ்யாவில் ஸ்டாலின் கம்யூனிச அரசை நிறுவினார்.**

(இ) டூமா எனும் நாடாளுமன்றத்தை சார் நிக்கோலஸ் நிறுவினார்.

(ஈ) ஜெனீவாவில் பன்னாட்டு சங்க தலைநகரம் உள்ளது.

**10. இரண்டாம் பாலகன் போர் முடிவடைந்த ஆண்டு**

(அ) 1923 (ஆ) 1926

**(இ) 1913** (ஈ) 1925

**11. கூற்று : முதல் உலகப் போரின் போது ரஷ்யா போரில் இருந்து வெளியேறியது.**

**காரணம் : ரஷ்யாவில் புரட்சி வெடித்தது.**

**(அ) கூற்றும், காரணமும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.**

(ஆ) கூற்றும், காரணமும் சரி,காரணம் கூற்வை விளக்கவில்லை

(இ) கூற்று சரி, காரணம் தவறு

(ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

## II.சுருக்கமான விடையளி

**1. மேற்கு மற்றும் பிரெஞ்சு முனைப்போர் பற்றி விளக்குக.**

- **பெல்ஜியம் மக்களின் எதிர்ப்பை** ஜெர்மனி தகர்த்தெறிந்தது.
- நேசநாடுகள் அணியில் போர் செய்ய வேண்டிய சுமை பிரெஞ்சுப் படைகளின் தோள்களின் மேல் விழுந்தது.
- ஒரு மாதத்திற்குள் ஏறத்தாழ **பாரீஸ் நகர் வீழ்ந்து விடும்** நிலை ஏற்பட்டது.

**2. ஆப்பிரிக்காவில் ஜெர்மன் காலனிகளின் நிலை என்ன?**

- கிழக்கு மற்றும் மேற்கு ஆப்பிரிக்காவிலிருந்து **ஜெர்மன் காலனிகளும்** நேச நாடுகளால் தாக்கப்பட்டன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



- இக்காலனிகளனைத்தும் ஜெர்மனியிலிருந்து தொலைதூரத்திலிருந்தாலும் அவற்றால் உடனடியாக எவ்வித உதவியையம் பெறமுடியாமல் போனதாலும் நாடுகளிடம் **சரணடையும் நிலை** ஏற்பட்டது.

---

**3. ஆஸ்திரியா - ஜெர்மனிய ஒருங்கிணைப்பை விவரி.**

- செர்பியா **ஜெர்மனியின் ஆட்சியின்** கீழ் வந்தது.
- ஆஸ்திரியா ஜெர்மனியப் படைகள் **பல்கேரியாவின் ஒருங்கிணைப்போடு** செர்பியாவை முற்றிலுமாக நசுக்கின.
- போரின் போக்கைக் கண்காணித்த ருமேனியா 1916-ஆண்டில் நேச நாடுகளின் அணியில் இணைந்தது. ஆனால் ருமேனியாவும் ஆஸ்திரிய -ஜெர்மன் படைகளால் கைப்பற்றப்பட்டது.

---

**4. வெர்டன் போர் பற்றி விளக்குக.**

- **ஐந்து மாத காலம்** நடைபெற்ற வெர்டன் போரில் இரண்டு மில்லியன் வீரர்கள் பங்கெடுத்தனர்.
- அவர்களில் **சரிபாதி வீரர்கள் கொல்லப்பட்டனர்.**
- 1916 ஆம் ஆண்டு **பிப்ரவரிக்கும் ஜுலைக்குமிடையே** ஜெர்மனியர் பிரான்சின் முக்கியக் கோட்டையான வெர்டனைத் தாக்கினார்.

---

**5. செவரஸ் உடன்படிக்கை தோற்றுபோனதற்கான காரணத்தை எழுதுக.**

- துருக்கியோடு மேற்கொள்ளப்பட்ட செவராஸ் உடன்படிக்கையைச் **சுல்தான் ஏற்றுக் கொண்டாலும்** அது முஸ்தபா கமால் பாட்சாவும் அவரைப் பின்பற்றுவோரும் எதிர்த்ததால் தோற்றுப்போனது.
- நேசநாடுகளில் **ஆஸ்திரியா, ஹங்கேரி, பல்கேரியா துருக்கி** ஆகிய நாடுகளுடன் தனித்தனியாக உடன்படிக்கையில் கையெழுத்திட்டன.

---

**6. போர் நிறுத்தமும் வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையும் விவரி.**

- போர் நிறுத்தம் **1918 நவம்பர் 11 முதல்** நடைமுறைக்கு வந்தது.
- இறுதியில் ஜெர்மனி **நவம்பர் 1918 ஆம் ஆண்டு** சரணடைந்தது.
- ஜெர்மனிய அரசர் கெய்சர் இரண்டாம் வில்லியம் பதவி விலகியதைத் தொடர்ந்து ஜெர்மனியில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியின் காரணமாக **ஜெர்மனி கடுமையான நிபந்தனைகள் ஒத்துக்கொள்ளும்** கட்டாயம் ஏற்பட்டது.

## II. விரிவான விடையளிக்கவும்

**1. முதலாளித்துவ நாடுகளின் சந்தைகளுக்கான போட்டி பற்றியும் முற்றுரிமை முதலாளித்துவத்தின் எழுச்சி பற்றியும் விரிவாக எழுதுக.**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



**காலனிகளுக்கான போட்டி:**

- முதலாளித்துவம் சார்ந்த தொழில்களின் நோக்கம் மிகை உற்பத்தி செய்வதாகும். இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட உபரிச் செல்வம் மென்மேலும் தொழிற்சாலைகள் அமைக்கவும், இருப்புப்பாதை அமைக்கவும், நீராவிக் கப்பல்கள் கட்டவும் அல்லது இவை போன்று பிறவற்றிற்கும் பயன்படுத்தப்பட்டது.
- ஐரோப்பிய நாடுகளிடையே இங்கிலாந்து ஒப்புயர்வற்ற இடத்தை வகித்ததோடு உலக முதலாளித்துவத்துக்குத் தேவையான தலைமையகமாகவும் விளங்கியது.
- பத்தொன்பதாம் நூற்றாண்டில் கருத்தைக் கவரும் ஒரு அம்சம் யாதெனில் ஐரோப்பா, மேலாதிக்க சக்தியாக உருப்பெற்றதும் ஆசியாவும், ஆப்பிரிக்காவும் காலனிகளாக்கப்பட்டு சுரண்டப்பட்டதுமாகும்.
- சந்தை, கச்சாப் பொருள் ஆகியவற்றுக்கான தேவைகள் வளர்ந்து கொண்டேயிருந்ததால் சுரண்டுவதற்காகத் தங்கள் பேரரசை விரிவாக்கம் செய்ய முதலாளித்துவ நாடுகள் உலகத்தைச் சுற்றிப் போட்டியில் இறங்கின.
- பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தகவல் பரிமாற்றம், போக்குவரத்து ஆகிய துறைகளில் ஏற்பட்ட புரட்சியானது ஆப்பிரிக்காவிலும் ஏனைய பகுதிகளிலும் ஐரோப்பிய விரிவாக்கம் அரங்கேற்றத் துணைபுரிந்தன.

**முற்றுரிமை முதலாளித்துவத்தின் எழுச்சி**

- சுதந்திர வணிகம் எனும் பழைய கோட்பாடு சரிந்து வீழ்ந்தது.
- அமெரிக்காவில் கூட்டு நிறுவனங்களும் ஜெர்மனியில் வணிகக் கூட்டிணைப்புகளும் உருவாயின.

---

**2. கடற்போர்கள் என்றால் என்ன? அமெரிக்கா எவ்வாறு முதல் உலக்போரில் பங்கேற்றது.**

- ஜெர்மனியர் தங்களின் நீர் மூழ்கிப்போரைத் தொடங்கினர். அவை நேச நாடுகளின் கப்பல்களுக்கு இடையூறு செய்தன.
- 1916-ல் வடகடலில் கடற்போர் நடைபெற்றது. இங்கிலாந்து இப்போரில் வெற்றி பெற்றது.
- புகழ் பெற்ற எம்டன் கப்பல் சென்னை மீது குண்டுகளை வீசியது.
- லூசிடானியா என்னும் அமெரிக்கக் கப்பல் ஜெர்மனியால் தாக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டது.
- இதன் காரணமாக மாபெரும் பொருளாதார பலத்தோடு அமெரிக்கா போரில் இறங்கியது.
- 1917 ஜனவரி திங்களில் நடுநிலை நாடுகளின் கப்பல்களையும் மூழ்கடிக்கப் போவதாக ஜெர்மனி அறிவித்தது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



**3. பன்னாட்டுச் சங்கத்தின் தோல்விக்கான காரணங்கள் எழுதுக.**

- ❖ கூட்டுப்பாதுகாப்பு எனும் கோட்பாட்டை நடைமுறையில் செயல்படுத்தவே முடியவில்லை.
- ❖ சங்கத்திற்கென்று இராணுவம் இல்லை என்பதால் தான் எடுத்த முடிவுகளை நடைமுறைப்படுத்த அதனால் இயலவில்லை.
- ❖ பன்னாட்டுச் சங்கம் முதல் உலகப்போரில் வெற்றி பெற்ற நாடுகளின் அமைப்பாகவே காணப்பட்டது.
- ❖ இது உலகளாவிய உறுப்பினர்களைக் கொண்டிருந்தாலும் அது ஐரோப்பிய ராஜதந்திரத்தின் மையமாக மாறியது.
- ❖ ஆரசியல் பிரச்சனைகளில் அதன் அனைத்து முடிவுகளுக்கும் உறுப்பினர்களின் ஒருமித்த கருத்து தேவைப்பட்டது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



வரலாறு

# அலகு 2 இரு உலகப்போர்களுக்கு இடையில் உலகம்

## கற்றலின் நோக்கங்கள்


**கீழ்க்காண்பனவற்றோடு அறிமுகமாதல்**

- முதல் உலகப்போருக்குப் பிந்தைய நிகழ்வுகள் பொருளாதாரப் பெருமந்தத்திற்கு இட்டுச் சென்றது.
- தோல்வியடைந்த நாடுகளின் மீது திணிக்கப்பட்ட, நீதிக்குப்புறம்பான வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்கள். இத்தாலியில் முசோலினியின் தலைமையிலும், ஜெர்மனியில் ஹிட்லரின் தலைமையிலும் பாசிச அரசுகள் எழுச்சி பெறுதல்
- காலனிகளாக்கப்பட்ட உலகில் காலனிய எதிர்ப்புப் போராட்டங்களும், காலனிய நீக்கச் செயல்பாடுகளும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பகுதிகளாக தென்கிழக்காசியாவில் இந்தோ–பிரான்சும், தெற்காசியாவில் இந்தியாவும்
- ஆப்பிரிக்காவில் ஐரோப்பியக்காலனிகள் உருவாக்கப்படுதல். அவ்வகையில் தென்னாப்பிரிக்காவில் இங்கிலாந்து காலனிகளை ஏற்படுத்துதல்
- தென் அமெரிக்காவில் விடுதலைப்போராட்டங்களும் அரசியல் வளர்ச்சிகளும்

## பாடம் சம்பந்தமான படங்கள்


முசோலினி


ஹிட்லர்


ஹோ சி மின்


நெல்சன் மண்டேலா


போயர் போர்


ஸ்மட்ஸ்


பிசாரோ


சைமன் பொலிவர்


முதலாம் பெட்ரோ


தியோடர் ரூஸ்வெல்ட்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



## பாடநூல் வினாக்கள்

## I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. **இத்தாலி யாருடன் லேட்டர்ன் உடன்படிக்கையைச் செய்து கொண்டது?** GMQ- 2019 QY - 2019 HY - 2019
   அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா
   **இ) போப்** ஈ) ஸ்பெயின்
2. **யாருடைய ஆக்கிரமிப்போடு மெக்சிகோ நாகரிகம் நிலைகுலைந்து போயிற்று?**
   **அ) ஹெர்மன் கோர்ட்ஸ்** ஆ) பிரான்சிஸ்கோ பிசாரோ
   இ) தௌசெயின்ட் லாவெர்ட்யூர் ஈ) முதலாம் பெட்ரோ
3. **பெரு நாட்டை யார் தங்களுடைய பகுதிகளில் ஒன்றாக ஆக்கிக்கொண்டனர்?**
   அ) ஆங்கிலேயர் **ஆ) ஸ்பானியர்**
   இ) ரஷ்யர் ஈ) ப்ரெஞ்சுக்காரர்கள்
4. **லத்தீன் அமெரிக்காவுடன் 'அண்டை நாட்டுடன் நட்புறவு' எனும் கொள்கையைக் கடைப்பிடித்த அமெரிக்கக் குடியரசுத்தலைவர் யார்?**
   **அ) ரூஸ்வெல்ட்** ஆ) ட்ரூமன்
   இ) உட்ரோ வில்சன் ஈ) ஐசனோவர்
5. **உலகத்தின் எந்தப்பகுதி டாலர் அரசியல் ஏகாதிபத்தியத்தை விரும்பவில்லை?** PTA-2
   அ) ஐரோப்பா **ஆ) லத்தீன் அமெரிக்கா**
   இ) இந்தியா ஈ) சீனா

| II. கோடிட்ட இடங்களை நிரப்புக. | விடைகள் |
|---|---|
| 1. சமூக ஜனநாயகக் கட்சியை நிறுவியவர் _______. | **பெர்டினண்ட் லாஸ்ஸல்லி** |
| 2. நாசிச கட்சியின் பிரச்சாரங்களுக்கு தலைமையேற்றவர். | **ஜோசப் கோயபெல்ஸ்** |
| 3. வியட்நாம் தேசியவாதிகள் கட்சி _______ல் நிறுவப்பட்டது. HY - 2019 | **கி.பி. 1927** |
| 4. நாசிச ஜெர்மனியின் ரகசியக் காவல்படை _______ என அழைக்கப்பட்டது. QY - 2019 | **கெஸ்டபோ** |
| 5. தென்னாப்பிரிக்க ஒன்றியம் _______ ஆம் ஆண்டு மே மாதம் உருவானது. | **கி.பி. 1910** |
| 6. ஆப்ரிக்க தேசியக் காங்கிரஸ் தலைவரான நெல்சன் மண்டேலா _______ ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். | **27** |
| 7. போயர்கள் _______ என்றும் அழைக்கப்பட்டனர். | **ஆப்பிரிக்க நேர்கள்** |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



## III. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.

1. i) முதல் உலகப்போரின் போது ஆஸ்திரியாவை தெற்கு முனைப் போரில் தொடர்ந்து முனைப்புடன் ஈடுபட வைப்பதே இத்தாலியின் முக்கியக் கடமையாக இருந்தது. **PTA-1**

   ii) இத்தாலியைக் காட்டிலும் நீண்ட காலங்கழித்தே ஜெர்மனி பாசிசத்தைக் கைக்கொண்டது.

   iii) அமெரிக்காவில் மிகப்பெரும் பங்குச் சந்தை வீழ்ச்சி 1929 ஆம் ஆண்டு ஆக்டோபர் மாதம் 24 ஆம் நாளில் ஏற்பட்டது.

   iv) ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் மீதானத் தடை 1966 இல் விலக்கிக் கொள்ளப்பட்டது.

   அ) i), ii) ஆகியவை சரி ஆ) iii) சரி

   இ) iii), iv) ஆகியவை சரி **ஈ) i), ii), iii) ஆகியவை சரி**

2. **கூற்று : தற்காப்புப் பொருளாதாரக் கொள்கையை முன்னிறுத்தியப் பொருளாதார தேசியம் எனும் புதிய அலையால் உலக வணிகம் பாதிக்கப்பட்டது.** **PTA-5**

   **காரணம் : அமெரிக்கா, கடன்பட்ட நாடுகளுக்குப் பொருளாதார உதவி செய்ய விருப்பமில்லாமல் இருந்ததனால் இந்நிலை உண்டானது.**

   அ) கூற்று, காரணம் இரண்டுமே சரி.

   **ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.**

   இ) கூற்று, காரணம் ஆகிய இரண்டுமே தவறு.

   ஈ) காரணம் சரி ஆனால் கூற்றுக்குப் பொருந்தவில்லை.

3. **கூற்று : 1884-85 இல் நடைபெற்ற பெர்லின் காலனிய மாநாடு காலனியாதிக்க சக்திகள் ஆப்பிரிக்காவைத் தங்களின் செல்வாக்கு மண்டலங்களாகப் பிரித்துக் கொள்ளலாம் எனத் தீர்மானித்தது.**

   **காரணம் : ஆங்கிலேயருக்கும், போயர்களுக்கும் தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற போர் இத்தீர்மானத்திற்கு எதிர்ப்பானதாகும்.**

   **அ) கூற்று, காரணம் இரண்டுமே சரி.**

   ஆ)கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.

   இ) கூற்று, காரணம் ஆகிய இரண்டுமே தவறு.

   ஈ) காரணம் தவறு ஆனால் காரணம் கூற்றுடன் பொருந்தவில்லை.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



## IV. பொருத்துக.

| I | | | II | | விடைகள் | |
|---|---|---|---|---|---|---|
| 1. | டிரான்ஸ்வால் | | அ. | ஜெர்மனி | 1. | ஈ |
| 2. | டோன்கிங் | | ஆ. | ஹிட்லர் | 2. | உ |
| 3. | ஹின்டன்பர்க் | GMQ- 2019 | இ. | இத்தாலி | 3. | அ |
| 4. | மூன்றாம் ரெய்க் | PTA-2 | ஈ. | தங்கம் | 4. | ஆ |
| 5. | மாட்டியோட்டி | | உ. | கொரில்லா நடவடிக்கைகள் | 5. | இ |

## V. சுருக்கமான விடையளிக்கவும்

**1. இந்தோ-சீனாவில் நடைபெற்ற "வெள்ளை பயரங்கம்" குறித்து நீங்கள் அறிந்ததென்ன?**

- ❖ 1887-ல் இருந்து **இந்தோ-சீனாவை** பிரான்ஸ் தன்னுடைய காலனி நாடாக வைத்திருந்தது. PTA-6 ஆகஸ்ட்-22
- ❖ 1927-ல் உருவாக்கப்பட்ட **வியட்நாம் தேசியக்கட்சி** இந்தோ-சீனாவை பிரான்சின் ஆதிக்கத்திலிருந்து **மீட்கப் பாடுபட்டது.**
- ❖ 1929-ல் நடைபெற்ற இராணுவப் புரட்சியும், அதைத் தொடர்ந்து நடைபெற்ற விவசாயிகள் புரட்சியும் தோல்வியில் முடிந்தன.
- ❖ இப்புரட்சியில் ஈடுபட்ட புரட்சியாளர்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர்.
- ❖ இந்நிகழ்ச்சி **"வெள்ளை பயங்கரவாதம்"** என அழைக்கப்பட்டது.

**2. ஒட்டாவா பொருளாதார உச்சி மாநாட்டின் முக்கியத்துவம் குறித்து விவாதிக்கவும்.**

- ❖ 1929-ஆம் ஆண்டு **உலகப்பெருமந்தம்** ஆங்கிலேய வாணிபத்தை பெரும் சேதத்திற்கு உள்ளாக்கியது.
- ❖ இந்த சேதத்தை இங்கிலாந்து தனது காலனி நாடுகளின் **தோள்களுக்கு மாற்ற** முடிவு செய்தது.
- ❖ 1931-ல் கூட்டப்பட்ட **ஒட்டவா பொருளாதார உச்சி மாநாட்டை** இதற்கு பயன்படுத்தியது.
- ❖ இதன்படி இம்மாநாட்டில் பங்கு பெற்ற நாடுகள் **இங்கிலாந்து பொருட்களுக்கு முன்னுரிமை** வழங்க ஒத்துக் கொண்டன.

**3. முசோலினியின் ரோமாபுரி நோக்கிய அணிவகுப்பின் விளைவுகள் யாவை?**

- ❖ **முசோலினியின் வலிமையை** உணர்த்த இந்த அணிவகுப்பு உதவியது.
- ❖ முசோலினியின் வலிமையை உணர்ந்த அரசர் மூன்றாம் விக்டர் இமானுவேல் முசோலினியை **ஆட்சியமைக்க** அழைத்தார்.
- ❖ முசோலினி இத்தாலியின் **சர்வாதிகாரியாக** உருவெடுத்தார்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



**4. 1884-85-ல் நடைபெற்ற பெர்லின் காலனிய மாநாட்டின் சாரத்தைக் குறிப்பிடுக.**

- 1875-ம் ஆண்டுக்குப் பின்னர் ஆப்பிரிக்காவில் ஐரோப்பியர்கள் தங்களது காலனிகளை நிறுவினர்.
- 1884-85 ஆண்டுகளில் நடைபெற்ற **பெர்லின் மாநாட்டில்** ஆப்பிரிக்காவை பிரிப்பது சம்மந்தமாக முடிவு எடுக்கப்பட்டது.
- அதன்படி ஆப்பிரிக்காவை **ஐரோப்பிய சக்திகள்** தங்களது **செல்வாக்கு மண்டலங்களாக** பிரித்துக் கொள்ளலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது.

**5. பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண்மையின் மீது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது.** செப் - 2021 மே - 2022

- உள்நாட்டு உற்பத்தி தொழில்களுக்கு **மரண அடி** கொடுத்தது.
- விவசாயி அரசுக்கு செலுத்த வேண்டிய பணம் **இரண்டு மடங்காகியது.**
- உள்நாட்டுப் பொருளாதாரத்தை பாதுகாக்க, இந்திய தேசியவாதிகளை போராடும் மக்கள் இயக்கமாக மாற்றியது.

**6. "டாலர் ஏகாதிபத்தியம்" - தெளிவு பட விளக்குக.** PTA-2

- அமெரிக்கா அதன் **தொலைதூர நட்பு நாடுகளுக்கு** பொருளாதார உதவிகளைச் செய்தது.
- இவ்வுதவிகள் மூலம் அந்நாட்டின் மீது **ஆதிக்கம் செலுத்தி** வந்தது. நாட்டை தக்கவும் வைத்தது.
- இதற்காக அமெரிக்கா பின்பற்றிய கொள்கையே **"டாலர் ஏகாதிபத்தியம்"** என்று அழைக்கப்பட்டது.

## VI. விரிவான விடையளிக்கவும்

**1. ஜெர்மனியில் ஹிட்லரின் எழுச்சிக்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகளைக் கண்டறியவும்.**

- 1918-ஆம் ஆண்டு முதல் 1933-ஆம் ஆண்டு வரை ஜெர்மனி ஒரு குடியரசு நாடாகவே இருந்தது.
- முதல் உலகப்போரில் ஜெர்மனிக்கு கிடைத்த தோல்வியும் அதனால் பட்ட அவமானங்களும் ஆளும் குடியரசு கட்சிக்கு எதிரான மன நிலையை ஏற்படுத்தியது.
- இந்த நேரத்தில் தான் ஜெர்மனியில் 1919-ஆம் ஆண்டு ஜெர்மன் தொழிலாளர் கட்சி தோற்றுவிக்கப்பட்டது.
- தொழிலாளர் கட்சியை தோற்றுவித்த ஏழு பேரில் ஒருவராக ஹிட்லர் இருந்தார்.
- முதல் உலகப்போரில் பவேரியப் படையில் இணைந்து ஹிட்லர் போரிட்டார்.
- ஆனால் போரில் ஜெர்மனி தோல்வி அடைந்ததால் அவர் மிகவும் மனம் வருந்தினார்.
- தொழிலாளர் கட்சியை தனது ஆற்றல் மிக்க உரையால் கட்டி எழுப்பினார்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



- ❖ 1923-ல் பவேரியாவை தனது புரட்சி மூலம் கைப்பற்ற நினைத்த அவரது எண்ணம் ஈடேறவில்லை.
- ❖ புரட்சியைத் தூண்டிய ஹிட்லர் சிறைப்பிடிக்கப்பட்டார்.
- ❖ சிறையில் இருந்தவாரே அவர் எழுதிய தனது சுயசரிதை நூலான "மெயின்காம்ப்" அவரது அரசியல் சிந்தனைகளை வெளிப்படுத்தியது.
- ❖ 1932-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் அவரது கட்சி 60,00,000 லட்சம் வாக்குகளை பெற்றது.
- ❖ இச்சூழ்நிலையை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி ஹிட்லர் ஜெர்மனியில் தவிர்க்க முடியாத சக்தியாக எழுச்சி பெற்றார்.

---

**2. உலகப் போர்களுக்கு இடைப்பட்ட காலத்தில் (1919-39) இந்தியாவில் காலனிய நீக்கச் செயல்பாடுகள் எவ்வாறு நடைபெற்றன என்பதைக் குறித்து வரிசையாக விவரிக்க முயற்சி செய்யவும்.**

இந்தியாவில் காலனிய நீக்கச் செயல்பாடுகள் 1905-ஆம் ஆண்டிலிருந்தே தொடங்கிவிட்டது. 1905-ல் தொடங்கப்பட்ட சுதேசி இயக்கம் அந்தியப் பொருட்களை தவிர்க்கச் சொல்லியது. முதல் உலகப் போர் முடிவடைந்ததும் இந்தியாவில் ஏற்பட்ட பொருளாதார சீர்கேடுகள் காலனிய நீக்கச் செயல்பாடுகளை விரைவுபடுத்தியது. இக்கட்டுரையில் காலனிய நீக்கச் செயல்பாடுகளை பின்வரும் தலைப்புகளில் காணலாம்.

**(அ) மாகாணங்களில் இரட்டையாட்சி**

- ❖ 1919-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இந்திய அரசுச் சட்டம் இந்திய மாகாணங்களில் இரட்டை ஆட்சியை அறிமுகம் செய்தது.
- ❖ இச்சட்டத்தின் மூலம் மாகாண சட்டசபைகளின் கீழ்வரும் சில துறைகளை இந்திய அமைச்சர்கள் நிர்வாகம் செய்ய வழி பிறந்தது.
- ❖ ஆனால் இந்த இரட்டை ஆட்சி முறையை காங்கிரஸ் புறக்கணிக்க முடிவு செய்தது.

**(ஆ) தொழில்மயமாக்குதலில் நடவடிக்கைக் குறைபாடுகள்**

- ❖ காலனியப் பொருளாதாரக் கொள்கைகள் இந்தியர்களுக்கு எவ்விதப் பாதுகாப்பு உணர்வையும் வழங்கவில்லை.
- ❖ கல்வி, புதிய தொழில்நுட்பங்கள், தொழிற்கூடங்கள் போன்றவற்றிற்கு அரசு உதவிகள் செய்தது.
- ❖ ஆனால் ஆங்கிலேய நிறுவனங்களின் எதிர்ப்பினால் அந்த உதவிகளும் வெகு விரையில் நின்று போனது.

**(இ) பெருமந்தத்தின் போது இந்தியா**

- ❖ 1929-ஆம் ஆண்டு ஏற்பட்ட உலகப் பெருமந்தம் ஆங்கிலேய வணிக வர்த்தக நடவடிக்கைகளை முடக்கிப் போட்டது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



- இதனால் ஏற்பட்ட விளைவுகளை இங்கிலாந்து தனது காலனிய நாடுகளுக்கு தோள் மாற்றியது.
- அந்நியச் செலவாணியை அதிகரிக்க இந்தியாவில் சுங்கவரிகள் அதிகரிக்கப்பட்டன
- இந்தியத் தங்கம் இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.
- இந்தியப் பண மதிப்பைக் கூட்டி இறக்குமதிப் பொருளின் விலை மலிவாக்கப்பட்டது.
- இந்த நடவடிக்கைகள் ஆங்கில அரசுக்கு எதிரான மனநிலையை ஏற்படுத்தியது.

**(ஈ) வேளாண்மையில் ஏற்பட்ட தாக்கம்**

- பெருமந்தம் இந்திய வேளாண்மைக்கும், இந்தியப் பொருட்களுக்கும் மரண அடிகொடுத்தது.
- வேளாண் உற்பத்திப் பொருட்களின் விலை பாதியாகக் குறைந்தது.
- விவசாயிகள் அரசுக்குக் கட்ட வேண்டிய தொகை இரண்டு மடங்காகியது.
- இந்தப் பொருளாதார வீழ்ச்சி மக்களை போராட்ட குணம் மிக்கவர்களாக மாற்றியது.

**1935-ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம்**

- இந்தியர்களை சமாதானம் செய்ய 1935-ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் இயற்றப்பட்டது.
- இச்சட்டம் உள்ளாட்சிகளில் இந்தியருக்கு அதிக அதிகாரம் வழங்கியது.
- இச்சட்டத்தின் அடிப்படையில் நடத்தப்பட்ட தேர்தல்களில் காங்கிரஸ் பெருவாரியான இடங்களைக் கைப்பற்றியது.
- இவ்வெற்றி இந்திய மண்ணில் இருந்து காலனி ஆதிக்கத்தை நீக்க பெருமளவில் உதவியது.

---

**3. தென் ஆப்பிரிக்க தேசிய அரசியலின் எழுச்சி வளர்ச்சி குறித்து விவரிக்கவும்.** **PTA-1**

- தென் ஆப்பிரிக்காவில் ஆங்கிலேயருக்கும், டச்சுக்காரர்களுக்கும் இடைய நீண்ட காலமாகப் பகை இருந்து வந்தது.
- தென்ஆப்பிரிக்காவில் இரண்டு முக்கிய கட்சிகள் இருந்தன.
- அவை முறையே ஆங்கிலேயரின் ஆதரவு பெற்ற யூனியனிஸ்ட் கட்சியும், டச்சுக்காரர்களின் ஆதரவு பெற்ற தென்ஆப்பிரிக்க கட்சியும் ஆகும்.
- முதன்முதலில் நடைபெற்ற தேர்தலில் தென்ஆப்பிரிக்க கட்சி வெற்றி பெற்றது.
- அதன் பிரதம மந்திரியான "போதா" ஆங்கிலேயருடன் நட்பு பாராட்டி ஆட்சி செய்தார்.
- இதை விரும்பாத தென்னாப்பிரிக்க கட்சியின் ஒரு பிரிவினர் "ஹர்சாக்" என்பவர் தலைமையில் "தேசியகட்சி" என்ற புதிய கட்சியைத் தொடங்கினர்.
- 1920-ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் தேசிய கட்சி 44 இடங்களையும், தென்னாப்பிரிக்க கட்சி 41 இடங்களையும் வென்றன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

❖ ஆங்கிலேயரின் ஆதரவு பெற்ற யூனியனிஸ்ட் கட்சி, தென்னாப்பிரிக்க கட்சியுடன் இணைந்தது.
❖ இதனால் தேசிய கட்சியின் ஆட்சிக் கனவு தகர்ந்தது.
❖ தென்னாப்பிரிக்க கட்சியின் தலைவர் "ஸ்மட்ஸ்" ஆட்சியை கைப்பற்றினார்.

## GMQ, PTA அரசு தேர்வு வினா விடைகள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**1. அமெரிக்க பங்குசந்தைகளில் முதல் பெரும் வீழ்ச்சி ஏற்பட்ட நாள்** செப்-2021

**அ) 24 அக்டோபர் 1929** ஆ) 14 அக்டோபர் 1929
இ) 24 நவம்பர் 1925 ஈ) 24 நவம்பர் 1928

**2. தென் அமெரிக்காவின் விடுதலையைத் துரிதப்படுத்தியது எது?** PTA-3

அ) அமெரிக்கா அளித்த உதவி **ஆ) நெப்போலியனின் படையெடுப்புகள்**
இ) சைமன் பொலிவரின் பங்கேற்பு ஈ) பிரெஞ்சுப்புரட்சி

### II. சுருக்கமாக விடையளிக்கவும்

**1. லேட்டரன் உடன்படிக்கையின் சரத்துக்கள் யாவை?** PTA-5

❖ முசோலினிக்கும், போப்பாண்டவருக்கும் இடையே இந்த உடன்படிக்கை கையெழுத்தானது.
❖ இதன் படி "வாடிகன்" நகருக்கு தனி நாடு அந்தஸ்து அளிக்கப்பட்டது.
❖ போப்பின் திருச்சபை இத்தாலியை பேரரசாக அங்கீகரித்தது.

**2. மன்றோ கோட்பாட்டை விளக்குக.** GMQ

❖ அமெரிக்காவின் தெற்குப் பகுதியில் ஐரோப்பியர்களின் தலையீடு அதிகளவில் இருந்தது.
❖ இதை முற்றிலும் ஒழிக்கும் விதமாக அமெரிக்க அதிபர் மன்றோ தனது கோட்பாட்டை அறிவித்தார்.
❖ அதன்படி அமெரிக்காவின் எந்தப் பகுதியிலும் அது வடக்கோ, அல்லது தெற்கோ ஐரோப்பியர்கள் தலையிடக்கூடாது.
❖ அப்படி தலையிட்டால் அது அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு கெதிரான போராக கருதப்படும் என்றார் அவர்.

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



## III. விரிவான விடையளிக்கவும்

**1. இத்தாலியில் முசோலியின் எழுச்சி பற்றிக் கூறுக.** **PTA-3**

- ❖ முசோலினி இத்தாலியில் ஒரு சாதாரண இரும்பு வேலை செய்பவரின் மகனாக பிறந்தார்.
- ❖ இளமை பருவத்தில் சோசலிச சிந்தனையுடன் ஒரு பத்திரிக்கையாளராக வளர்ந்தார்.
- ❖ இவர் சிறந்த பேச்சாளராகவும் இருந்தார்.
- ❖ 1919-ல் பாசிக கட்சி இத்தாலியில் தொடங்கப்படவே, உடனடியாக தன்னை அதன் உறுப்பினராக்கினார்.
- ❖ பாசிஸ்ட்டுகள் அதிகாரம், வலிமை, ஒழுக்கம் ஆகியவற்றை கடைப்பிடித்ததால் மக்களின் ஆதரவைப் பெறத் தொடங்கினர்.
- ❖ 1922-ல் அமைச்சரவை சிக்கல் ஏற்பட்ட போது முசோலினி ரோமை நோக்கி ஒரு நீண்ட அணிவகுப்பை நடத்தினார்.
- ❖ முசோலினியின் வலிமையை கண்ட அரசர் "மூன்றாம் விக்டர் இமானுவேல்" முசோலியை ஆட்சியமைக்க அழைத்தார்.
- ❖ 1924-ல் நடந்த தேர்தலின் பாசிஸ்ட்டுகளுக்கு ஆதரவாக சுமார் 65 விழுக்காடு வாக்குகள் பதிவாகின.
- ❖ இவ்வெற்றியை ஏற்றுக் கொள்ளாத எதிர்கட்சி தலைவர்கள் கொலை செய்யப்பட்டனர்.
- ❖ பத்திரிக்கை சுதந்திரம் தடை செய்யப்பட்டது.
- ❖ 1926-ல் "இரண்டாம் டியூஸ்" எனும் பட்டத்தை முசோலினி சூடிக் கொண்டார்.
- ❖ 1938-ல் பாராளுமன்றம் ஒழிக்கப்பட்டது. முசோலினி சர்வ அதிகாரம் படைத்தவராக எழுச்சி பெற்றார்.

**2. ஹோ சி மின் பற்றியும் வியட் மின் கட்சியின் உதயம் பற்றியும் குறிப்பு வரைக.** **செப்-2020** **அ.மா.தே-23**

**ஹோ சி மின்**

- ❖ ஹோ சி மின் 1890ம் ஆண்டில் பிறந்தார்.
- ❖ தனது 21ஆவது வயதில் அவர் ஐரோப்பா சென்றார்.
- ❖ 1921இல் கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கினார்.
- ❖ லண்டன் உணவு விடுதி ஒன்றில் சமையல் கலைஞராக பணியாற்றிய பின் பாரிஸ் சென்றார்
- ❖ பாரிஸ் அமைதி மாநாட்டில் வியட்நாமின் சுதந்திரத்திற்காக ஆதரவு திரட்டினார்.
- ❖ வியட்நாமின் தேசியவாதி ஆனார்.
- ❖ 1925 இல் புரட்சிகர இளைஞர் இயக்கம் எனும் அமைப்பை நிறுவினர்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



**ஹோசிமின் வியட் மின் கட்சியில் உதயம்**

- ❖ 1927-இல் இந்தோ சீனாவில் வியட் மின் கட்சியை உருவாக்கினார்.
- ❖ 1929- வியட்நாம் வீரர்கள் ராணுவ புரட்சி செய்தனர்.
- ❖ புரட்சி தோல்வி அடைந்தாலும் மிகப்பெரும் விவசாய புரட்சி நடைபெற்றது.
- ❖ புரட்சி ஒடுக்கப்பட்டது தொடர்ந்து வெள்ளை பயங்கரவாதம் அரங்கேறியது.

---

**3. பாரிஸ் அமைதி மாநாட்டின் முடிவுகள் எவ்வாறு இத்தாலியில் பாசிசம் தோன்றக் காரணமாக அமைந்தன?** **PTA-4**

- ❖ முதல் உலகப்போரின் முடிவில் இத்தாலி பெரும் பணத்தை இழந்திருந்தது.
- ❖ ஆனால் அதனால் கிடைத்த ஆதாயமோ மிகச்சிறியது.
- ❖ வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை மூலமாக இத்தாலிக்கு மிகச்சிறிய பகுதிகளே கிடைத்தன.
- ❖ இதனால் இத்தாலிய தேசியவாதிகள் மகிழ்வற்று இருந்தனர்.
- ❖ போரின் முடிவில் ஏற்பட்ட பணவீக்கம் இத்தாலியை மிகவும் பாதித்தது.
- ❖ வெர்செய்ல்ஸில் ஏற்பட்ட அவமானத்திற்கு அப்போதைய ஆட்சியாளர்களே காரணம் எனக் கருதினர்.
- ❖ இதனால் 1919-ல் நடைபெற்ற தேர்தலில் இத்தாலிய சேலிஸ்டுகள் மூன்றின் ஒரு பங்கு இடத்தைக் கைப்பற்றினர்.
- ❖ 1919-ல் பாசிக கட்சி தொடங்கப்பட்டு, 1922-ல் முசோலினி தலைமையில் ஆட்சியைப் பிடித்தது.

## கூடுதல் வினாக்கள்

## I. சரியான விடையைத் தேர்வு செய்க.

**1. ஹிட்லர் சிறையில் இருந்த போது எழுதிய புத்தகம்**

**(அ) மெயின் காம்ப்** (ஆ) ஜெர்மனி
(இ) எனது ஜெர்மனி (ஈ) நியூ ஜெர்மனி

**2. அமெரிக்க பங்குச் சந்தை வீழ்ச்சி அடைந்த ஆண்டு**

(அ) 1919 **(ஆ) 1929**
(இ) 1939 (ஈ) 1947

**3. "இறுதி தீர்வு" என்ற சொல் எதற்காக பயன்படுத்தப்பட்டது**

(அ) படைப்பெருக்கம் (ஆ) நாடு பிடித்தல்
**(இ) யூத அழிப்பு** (ஈ) போர் தொடுத்தல்

**4. புரட்சிகர இளைஞர் இயக்கம் என்ற அமைப்பை தொடங்கியவர்**

(அ) லெனின் (ஆ) ஸ்டாலின்
(இ) ஹிட்லர் **(ஈ) ஹோ சி மின்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in


**5. ஹிட்லரின் இரகசிய காவல் படை**

**(அ) கொப்டபோ** (ஆ) கருஞ்சட்டையினர்

(இ) செஞ்சட்டையினர் (ஈ) இவற்றில் ஏதுமில்லை

**6. இத்தாலியில் பாராளுமன்ற ஆட்சியை ஒழித்தவர்**

(அ) கெய்சர் வில்லியம் (ஆ) இமானுவேல்

**(இ) முசோலினி** (ஈ) ஹிட்டன்பர்க்

**7. அமெரிக்க ராணுவ ஆட்சியின் கீழ் இருந்த தென் அமெரிக்க நாடு**

(அ) பிரேசில் (ஆ) சிலி

**(இ) கியூபா** (ஈ) அர்ஜென்டினா

**8. "போயர்கள்" என்று அழைக்கப்பட்டவர்கள்**

(அ) செவ்விந்தியர்கள **(ஆ) டச்சுக் குடியேறிகள்**

(இ) ஸ்பானிய குடியேறிகள் (ஈ) இவற்றில் ஏதுமில்லை

**9. பாசிச கட்சி தொடங்கப்பட்ட ஆண்டு**

**(அ) 1919** (ஆ) 1920

(இ) 1929 (ஈ) 1932

**10. நெல்சன் மண்டேலா எந்த நாட்டைச் சேர்ந்தவர்**

(அ) அமெரிக்கா (ஆ) இந்தியா

(இ) ரஷ்யா **(ஈ) தென் ஆப்பிரிக்கா**

## II. சுருக்கமான விடையளிக்கவும்

**1. போயர் போர்களின் போது இங்கிலாந்து மற்றும் சுதந்திர போயர் நாடுகளின் காலனிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.**

❖ இங்கிலாந்தின் காலனி - நேட்பால், கேப்காலனி.

❖ சுதந்திர போயர் காலனி-டிரான்ஸ்வால் மற்றும் ஆரஞ்சு சுதந்திர அரசு

**2. பிராங்களின் ருஸ்வெல்ட் தன்னுடைய "நல்ல அண்டை வீட்டுக்காரன்" என்ற கொள்கையில் என்ன அறிவித்தார்?**

❖ பிராங்களின் ருஸ்வெல்ட் தன்னுடைய **"நல்ல அண்டை வீட்டுக்காரன்"** கொள்கையில், அமெரிக்கா வேறு எந்த நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களிலும் தலையிடாது எனக் கூறியதோடு லத்தீன் **அமெரிக்கா நாடுகளுக்குப் பொருளாதார தொழில் நுட்ப உதவிகளைச் செய்யவும்** ஒத்துக் கொண்டார்.


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



**3. தங்க மதிப்பீட்டு அளவு என்றால் என்ன?**

- ❖ தங்க மதிப்பீடு அளவு என்பது ஒரு **நாணயமுறை** ஆகும். இதில் ஒரு நாட்டினுடைய **நாணயம் அல்லது காகிதப்பணம் தங்கத்தோடு நேரடி தொடர்புடைய** ஒரு மதிப்பினைப் பெற்றிருக்கும்.

**4. பெர்லின் காலனிய மாநாட்டின் முடிவு யாது? பெரிலின் காலனிய மாநாட்டில் என்ன தீர்மானிக்கப்பட்டது?**

- ❖ பெர்லின் காலனிய மாநாட்டில் காலனியாதிக்க சக்திகள் **ஆப்பிரிக்காவைத் தங்கள் செல்வாக்கு மண்டலங்களாகப்** பிரித்து கொள்ளலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது.

**5. கம்யூனிசச் சிந்தனைகள் எவ்வாறு காலனிய எதிர்புணர்வின் எழுச்சிக்கு வழிவகுத்தது?**

- ❖ சீனத் தலை நிலப்பகுதியிலிருந்து பரவிய கம்யூனிசச் சிந்தனைகளினால் **இந்தோ சீனாவில் கனிசமான செல்வம்** காலனியாதிக்க சக்திக்கே பயன்படுவதை பலர் உணர்ந்தனர். இதுவே காலனிய **எதிர்ப்புணர்வுகள் எழுச்சிக்கு** காரணமாகிறது.

## III. விரிவான விடையளிக்கவும்

**1. ஆசியாவில் ஜப்பானின் எழுச்சி பற்றி எழுதுக**

**ஆசியா: ஜப்பானிய எழுச்சி**

- ❖ ஆசியாவின் ஜப்பான் இக்காலப் பகுதியில் (மெய்ஜி சகாப்தம் 1867-1912) மேற்கத்திய நாடுகளைப் பினபற்றிப் பலதுறைகளில் அவற்றுக்கு நிகராக மாறியது.
- ❖ நவீன இராணுவம், கப்பற்படை ஆகியவற்றுடன் தொழில் துறையில் முன்னேறிய நாடாக ஜப்பான் மேலெழுந்தது.
- ❖ ஆட்சியாளர்கள் நிலமானிய முறை சிந்தனைகளை விட்டொழித்தனர்.
- ❖ இதனால் தொழில்துறையில் ஜப்பான் எழுச்சி பெற்றது.

**2. போயர் போர்கள் பற்றி விளக்கி எழுதுக.**

- ❖ இங்கிலாந்தின் காலனிகளான நேட்டால், கேப் காலனி ஆகிய இரண்டிற்கும் சுதந்திர போயர் நாடுகளான டிரான்ஸ்வால் மற்றும் ஆரஞ்சு சுதந்திர அரசு ஆகியவற்றுக்கிடையே நீண்ட காலமாக நட்புறவு நிலவவில்லை.
- ❖ 1886-இல் டிரான்ஸ்வால் பகுதியில் தங்கம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அதன் சுற்றுப்புறங்களில் ஆங்கிலேயர் குடியேறினர்.
- ❖ 1899-ல் தொடங்கிய போயர் போர்கள் 1902 வரை மூன்றாண்டுகள் தொடர்ந்தன.
- **கங்கை - பிரம்மபுத்திரா டெல்டா** பகுதிகளில் உலகில் மிகப்பெரிய சதுப்பு நிலக்காடுகள் உள்ளன.
- மகாநதி, கோதாவரி மற்றும் கிருஷ்ணா நதிகளின் டெல்டா பகுதிகளிலும் காணப்படுகின்றன.
- இவை **"மாங்குரோவ் காடுகள்"** என்றும் அழைக்கப்படுகின்றன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



## III. விரிவான விடையளி.

**1. இந்தியாவின் மழைப்பரவல் பற்றி எழுதுக.**

- இந்தியாவில் ஆண்டு சராசரி மழையளவு 118 செ.மீ இருப்பினும், நாட்டின் மழை வீழ்ச்சியின் பரவல் சீரற்றுக் காணப்படுகின்றது.
- மேற்கு கடற்கரை, அசாம், மேகாலயாவின் தென்பகுதி, திரிபுரா, நாகலாந்து போன்ற பகுதிகள் 200 செ.மீட்டருக்கும் அதிகமான மழைப்பொழிவை பெறுகின்றன.
- இராஜஸ்தான் மாநிலம் முழுவதும், பஞ்சாப், ஹரியானா, உத்திரப்பிரதேச மாநிலத்தின் மேற்கு மற்றும் தென்மேற்கு பகுதிகள் மத்தியப் பிரதேசத்தின் மேற்கு பகுதி மற்றும் மேற்கு தொடர்ச்சி மலையின் கிழக்கு பகுதி, தக்காண பீடபூமி மற்றும் தமிழக கடற்கரையின் ஒரு குறுகிய பகுதி போன்றவை 100 செ.மீட்டருக்கும் குறைவான மழைப்பொழிவை பெறுகின்றன.
- மற்ற பகுதிகள் 100 முதல் 200 செ.மீ வரையிலான மழைப்பொழிவைப் பெறுகின்றன.
- உலகில் மிக அதிக அளவு மழைபெறும் (1141செ.மீ) பகுதியான "மௌசின்ராம்" மேகாலயாவில் அமைந்துள்ளது.

**2. இந்தியாவின் காலநிலையைப் பாதிக்கும் காரணிகளாக பருவக்கால காற்று மற்றும் ஜெட் காற்றோட்டங்கள் பற்றி விவரி.**

**பருவக்கால காற்று**

- இந்தியாவின் காலநிலையைப் பாதிக்கும் மிக முக்கிய காரணி பருவக்கால காற்றாகும்.
- இவை பருவங்களுக்கேற்ப மாறி வீசும் காற்றுகளாகும்.
- இந்தியா ஒரு ஆண்டின் கணிசமான காலத்தில் பருவக்காற்றுகளின் தாக்கத்திற்கு உள்ளாகிறது.
- இந்தியாவில் சூரியனின் செங்குத்துக் கதிர்கள் ஜூன் மாத மத்தியில் விழுகின்ற பொழுதிலும் கோடைக்காலமான மே மாத இறுதியில் முடிவடைகிறது.
- தென்கிழக்கு இந்தியாவின் காலநிலையும் வடகிழக்கு பருவக்காற்றின் ஆதிக்கத்திற்கு உட்படுகிறது.

**ஜெட் காற்றோட்டங்கள்**

- வளிமண்டலத்தின் உள் அடுக்குகளில் குறுகிய பகுதிகளில் வேகமாக நகரும் காற்றுகள் "ஜெட் காற்றுகள்" எனப்படும்.
- ஜெட் காற்றோட்ட கோட்பாட்டின் படி, துணை அயன மேலை காற்றோட்டம் வடபெரும் சமவெளியிலிருந்து திபெத்திய பீடபூமியை நோக்கி இடம் பெயர்வதால் தென்மேற்கு பருவக்காற்று உருவாகின்றது.
- கீழ் ஜெட் காற்றோட்டங்கள் தென்மேற்கு மற்றும் பின்னடையும் பருவக்காற்று காலங்களில் வெப்ப மண்டல தாழ்வழுத்தங்களை உருவாக்குகின்றன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in




புவியியல்

# அலகு 3 இந்தியா - வேளாண்மை


## கற்றலின் நோக்கங்கள்

- இந்திய மண் வகைகளின் தன்மை மற்றும் பரவலைப் புரிந்துகொள்ளல்
- நீர்ப்பாசனம் மற்றும் பல்நோக்கு திட்டங்களின் முக்கியத்துவத்தை தெரிந்துகொள்ளல்
- இந்திய வேளாண்மை வகைகள் மற்றும் அதன் முக்கியத்துவத்தை கற்றறிதல்
- இந்திய கால்நடை மற்றும் மீன் வளங்களைப் புரிந்துகொள்ளல்
- இந்தியா வேளாண்மை எதிர்கொள்ளும் பிரச்சனைகள் பற்றி புரிந்துகொள்ளல்


## பாடம் சம்பந்தமான படங்கள்




இந்தியா - மண் வகைகள்




நீர்ப்பாசனத்தின் பரப்பளவு





கலப்பின விவசாயம்



நெல் சாகுபடி



மீன் பிடித்தல்






Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## பாடநூல் வினாக்கள்

## I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. ________ மண்ணில் இரும்பு ஆக்ஸைடு அதிகமாக காணப்படுகிறது. **மே - 2022**

   அ) வண்டல் ஆ) கரிசல்

   **இ) செம்மண்** ஈ) உவர் மண்

2. எந்த நிறுவனம் இந்தியாவில் உள்ள மண் வகைகளை 8 பெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளது?

   **அ) இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம்**

   ஆ) இந்திய வானியல் துறை

   இ) இந்திய மண் அறிவியல் நிறுவனம்

   ஈ) இந்திய மண் ஆய்வு நிறுவனம்

3. ஆறுகளின் மூலம் உருவாகும் மண்

   அ) செம்மண் ஆ) கரிசல் மண்

   இ) பாலை மண் **ஈ) வண்டல் மண்**

4. இந்தியாவின் உயரமான புவிஈர்ப்பு அணை

   அ) ஹிராகுட் அணை **ஆ) பக்ராநங்கல் அணை**

   இ) மேட்டூர் அணை ஈ) நாகர்ஜுனா சாகர் அணை

5. ________ என்பது ஒரு வாணிபப் பயிர்.

   **அ) பருத்தி** ஆ) கோதுமை

   இ) அரிசி ஈ) மக்காச் சோளம்

6. கரிசல் மண் ________ எனவும் அழைக்கப்படுகிறது. **PTA-6**

   அ) வறண்ட மண் ஆ) உவர் மண்

   இ) மலை மண் **ஈ) பருத்தி மண்**

7. உலகிலேயே மிக நீளமான அணை ________. **PTA-1**

   அ) மேட்டூர் அணை ஆ) கோசி அணை

   **இ) ஹிராகுட் அணை** ஈ) பக்ராநங்கல் அணை

8. இந்தியாவில் தங்க இழைப் பயிர் என அழைக்கப்படுவது ________. **PTA-2**

   அ) பருத்தி ஆ) கோதுமை

   **இ) சணல்** ஈ) புகையிலை

## II. சரியான கூற்றைத் தேர்வு செய்க.

1. கூற்று : பழங்கள் காய்வகைகள் மற்றும் பூக்கள் பயிரிடலில் ஈடுபடுவது தோட்டக்கலைத் துறையாகும். **PTA-5**

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



**காரணம் : உலகளவில் இந்தியா, மா, வாழை மற்றும் சிட்ரஸ் பழவகை உற்பத்தியில் முதலிடத்தில் உள்ளது.**

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.

ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல.

**இ) கூற்று சரி, காரணம் தவறு.**

ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

2. **கூற்று : வண்டல் மண் ஆறுகளின் மூலம் அரிக்கப்பட்டு படியவைக்கப்பட்ட, மக்கிய பொருட்களால் ஆன ஒன்று.**

**காரணம் : நெல் மற்றும் கோதுமை வண்டல் மண்ணில் நன்கு வளரும்.**

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, கூற்று காரணத்திற்கான சரியான விளக்கம்.

**ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, கூற்றுக்கான காரணம் சரியான விளக்கமல்ல.**

இ) கூற்று சரி, காரணம் தவறு.

ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

## III. பொருந்தாதைத் தேர்ந்தெடுக்கவும்.

1. அ) கோதுமை ஆ) நெல்
   இ) திணை வகைகள் **ஈ) காபி**

2. அ) காதர் ஆ) பாங்கர் GMQ - 2019 மே - 2022
   இ) வண்டல் மண் **ஈ) கரிசல் மண்**

3. அ) வெள்ளப் பெருக்கு கால்வாய் ஆ) வற்றாத கால்வாய் PTA-1
   **இ) ஏரிப்பாசனம்** ஈ) கால்வாய்

## IV. பொருத்துக.

| | I | | II | விடைகள் | |
|---|---|---|---|---|---|
| 1. | இந்தியாவின் சர்க்கரை கிண்ணம் | அ. | மகாநதி | 1. | ஈ |
| 2. | காபி | ஆ. | தங்கப் புரட்சி | 2. | இ |
| 3. | டெகிரி அணை | இ. | கர்நாடகா | 3. | உ |
| 4. | ஹிராகுட் GMQ - 2019 | ஈ. | உத்திரப்பிரதேசம் மற்றும் பீகார் | 4. | அ |
| 5. | தோட்டக்கலை | உ. | இந்தியாவின் உயரமான அணை | 5. | ஆ |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



## V. சுருக்கமான விடையளிக்கவும்.

**1. "மண்" - வரையறு.** PTA-1

- ❖ மண் புவியின் **மேற்பரப்பில் காணப்படும் ஒரு அடுக்கு** ஆகும்.
- ❖ இது கனிமங்களின் கூட்டுப்பொருட்கள், **மக்கிய தாவரங்கள், விலங்கின பொருட்கள், காற்று மற்றும் நீர்** ஆகியவற்றால் ஆனது.

**2. இந்தியாவில் காணப்படும் மண் வகைகளின் பெயர்களைப் பட்டியலிடுக.**

- ❖ வண்டல் மண்
- ❖ செம்மண்
- ❖ மலைமண்
- ❖ கரிசல் மண்
- ❖ சரளை மண்
- ❖ பாலைமண்

**3. கரிசல் மண்ணின் ஏதேனும் இரண்டு பண்புகளை எழுதுக.**

- ❖ **கால்சியம், மெக்னீசியம், சுண்ணாம்பு மற்றும் அதிக அளவிலான இரும்புச்** சத்துக்கள் காணப்படுகின்றன.
- ❖ **நைட்ரஜன், பாஸ்போரிக் அமிலம்** மற்றும் இலை மக்குகள் குறைவாக உள்ளன.

**4. வேளாண்மை வரையறு.** ஆகஸ்ட்-22

- ❖ **ஒரு குறிப்பிட்ட பயிரைக் குறிப்பிட்ட இடத்தில் உற்பத்தி செய்வது** வேளாண்மை ஆகும்.
- ❖ மேலும் கால்நடைகள் வளர்த்தும் மக்களுக்கு உணவையும் கால்நடைகளுக்குத் தீவனத்தையும் அளிப்பது வேளாண்மையின் ஒரு பகுதி ஆகும்.

**5. இந்தியாவில் வேளாண்மை முறைகளைக் குறிப்பிடுக.** GMQ - 2019

- ❖ தன்னிறைவு வேளாண்மை
- ❖ தீவிர வேளாண்மை
- ❖ கலப்பு வேளாண்மை
- ❖ இடப்பெயர்வு வேளாண்மை
- ❖ வறண்ட நில வேளாண்மை
- ❖ படிக்கட்டு முறை வேளாண்மை

**6. இந்திய வேளாண் பருவங்களைக் குறிப்பிடுக.** QY - 2019 PTA-2

- ❖ ஜுன் - செப்டம்பர் - காரிஃப் பருவம்
- ❖ அக்டோபர் - மார்ச் - ராபி பருவம்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



❖ ஏப்ரல் - ஜூன் - சையத் பருவம்

**7. இந்தியாவின் தோட்டப் பயிர்களைக் குறிப்பிடுக.** PTA-6

❖ தேயிலை, காபி, இரப்பர் மற்றும் வாசனைப் பொருட்கள் போன்றவைகள் இந்தியாவின் முக்கியத் தோட்டப் பயிர்கள் ஆகும்.

**8. கால்நடைகள் என்றால் என்ன?** PTA-5

❖ **நிலத்தை உழுவதற்கும், பயிர்களுக்கு உரம் அளிப்பவைகளாகவும்** விளங்குபவையே கால்நடைகள் ஆகும்.

❖ இந்திய **விவசாயத்தின் ஒருங்கிணைந்த கூறுகள்** கால்நடைகள் ஆகும்.

❖ வேளாண்மை பொய்க்கும் போது நமக்கு வேலை **வாய்ப்பையும், வருவாயையும்** அளிப்பவை கால்நடைகளே ஆகும்.

**9. இந்தியாவில் மீன் வளர்ப்பு பிரிவுகளைப் பற்றி ஒரு சுருக்கமான குறிப்பு தருக.**

❖ இந்தியாவில் மீன்பிடித் தொழில் **இரு வகைகளாக** உள்ளது.

❖ கடற்கரைப் பகுதிகளிலும், **ஆழ்கடலிலும் மீன் பிடிப்பது** கடல் மீன் பிடிப்பு என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

❖ ஆறுகள், ஏரிகள், குளங்கள் மற்றும் கண்மாய்கள் ஆகிய இடங்களில் மீன்பிடிப்பது **உள்நாட்டு மீன்பிடிப்பு** ஆகும்.

## VI. காரணம் கூறுக.

**1. வேளாண்மை இந்தியாவின் முதுகெலும்பு** PTA-1

❖ இந்தியப் பொருளாதாரத்தில் **வேளாண்மையே** பிரதான பங்கு வகிக்கிறது.

❖ பெருவாரியான மக்களுக்கு வேலை வாய்ப்பையும், நாட்டு வருமானத்தில் 25 விழுக்காடு வருவாயையும் வேளாண்மையே கொடுக்கிறது.

**2. மழைநீர் சேமிப்பு அவசியம்.** QY - 2019 GMQ - 2019

❖ இந்திய அயன மண்டல பருவக்காற்று காலநிலையைப் பெற்றுள்ளதால் மழைப்பொழிவு **சீராகக் கிடைப்பதில்லை.**

❖ ஆகவே கிடைக்கும் **மழைநீரை சேமிப்பது அவசியம்** ஆகும்.

## III. வேறுபடுத்துக.

**1. ராபி பருவம் மற்றும் காரிஃப் பருவம்** PTA-6

| ராபி பருவம் | காரிஃப் பருவம் |
|---|---|
| ❖ **குளிர்காலத்தில் தொடங்கி கோடையில்** அறுவடை | ❖ **பருவ காலத்தில் தொடங்கி செப்டம்பரில்** அறுவடை |
| ❖ கோதுமை, கடுகு மற்றும் நிலக்கடலை ஆகியவை முக்கியப் பயிர்கள் | ❖ நெல், பருத்தி, ராகி ஆகியவை முக்கியப் பயிர்கள் |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



2. **வெள்ளப் பெருக்குக் கால்வாய் மற்றும் வற்றாத கால்வாய்**

| வெள்ளப் பெருக்குக் கால்வாய் | வற்றாத கால்வாய் |
|---|---|
| ❖ மழைக் காலத்தில் **ஆற்றிலிருந்து நேரடியாகத்** தண்ணீர் பெறப்படும். | ❖ ஆற்றின் குறுக்கே **அணைகளைக் கட்டித் தேவைப்படும்** பொழுது தண்ணீர் பெறப்படும். |
| ❖ **வெள்ள நீரைத் திசை திருப்பப்** பயனுள்ளதாய் அமையும். | ❖ **நீரைப் பாசனத் தேவைகளுக்குப்** பயன்படுத்த உதவும். |

3. **கடல் மீன் பிடிப்பு மற்றும் உள்நாட்டு மீன்பிடிப்பு** PTA-5

| கடல் மீன் பிடிப்பு | உள்நாட்டு மீன்பிடிப்பு |
|---|---|
| ❖ **கடற்கரைகளிலும், ஆழ்கடலிலும்** மீன் பிடித்தல் நடைபெறும் | ❖ **ஆறுகள், ஏரிகள், குளங்கள்** மற்றும் கண்மாய்களில் மீன்பிடித்தல் நடைபெறும். |
| ❖ **கேரளா** கடல் மீன்பிடித்தல் தொழிலில் முதன்மையாக உள்ளது. | ❖ **ஆந்திரா** உள்நாட்டு மீன்பிடித்தல் தொழிலில் முதன்மையாக உள்ளது. |

4. **வண்டல் மண் மற்றும் கரிசல் மண்** மே - 2022

| வண்டல் மண் | கரிசல் மண் |
|---|---|
| ❖ சமவெளிகளில் ஓடும் ஆறுகளால் **படிய வைக்கும் போது** உருவாகிறது. | ❖ தக்காணப் பீடபூமியில் உள்ள **பசால்ட் பாறை அரிப்பின் மூலம்** உருவாகிறது. |
| ❖ **பொட்டாசியம், சுண்ணாம்பு** மற்றும் கார்பன் சலவைகள் நிறைந்தது. | ❖ **அலுமினியம், கால்சியம்,** மெக்னீசியம் மற்றும் இரும்பு கலவைகள் நிறைந்தது. |
| ❖ **நெல் மற்றும் கோதுமை** முக்கியப் பயிர்கள் ஆகும். | ❖ **பருத்தி மற்றும் புகையிலை** முக்கியப் பயிர்கள் ஆகும். |

## VII. ஒரு பத்தி அளவில் விடையளி.

1. **இந்திய மண் வகைகள் ஏதேனும் ஐந்தினைக் குறிப்பிட்டு மண்ணின் பண்புகள் மற்றும் பரவல் பற்றி விவரி.** செப் - 2021

**(அ) வண்டல் மண்**

**(i) பண்புகள்**

❖ வெளிர் மற்றும் அடர் நிறமுடைய மண்ணாகக் காணப்படுகிறது.

❖ பொட்டாசியம், சுண்ணாம்பு மற்றும் கார்பண் கலவைகள் அதிகமாகக் காணப்படும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



**(ii) பரவல்**

❖ கங்கை, பிரம்மபுத்திரா மற்றும் பல்வேறு ஆற்றுச் சமவெளி பகுதிகளில் அதிகளவு பரவிக் காணப்படும்.

**(ஆ) கரிசல் மண்**

**(i) பண்புகள்**

❖ கருப்பு நிறத்தில் காணப்படும்.

❖ டைட்டானியம் மற்றும் இரும்புத் தாதுக்கள் அதிகளவு இம்மண்ணில் உள்ளன.

❖ ஈரத்தை நீண்ட நேரம் தக்க வைத்துக் கொள்ளும் தன்மை கொண்டது.

**(ii) பரவல்**

❖ தக்காணப் பீடபூமி மற்றும் மாளவப் பீடபூமிப் பகுதிகளில் அதிகளவு காணப்படுகிறது.

**(இ) செம்மண்**

**(i) பண்புகள்**

❖ படிகப் பாறைகள் சிதைவதால் உருவாகின்றன.

❖ இரும்பு மற்றும் மெக்னீசியம் அதிகமாகக் காணப்படும்.

❖ சுண்ணாம்புச் சத்துகள் குறைவாகக் காணப்படும்.

**(ii) பரவல்**

❖ கேரளா, தமிழ்நாடு மற்றும் சோட்டா நாக்பூர் பீடபூமிப் பகுதிகளில் அதிகளவு காணப்படும்.

**(ஈ) சரளை மண்**

**(i) பண்புகள்**

❖ வெப்பம் மற்றும் குளிர்ச்சி அடுத்தடுத்து உருவாகும் போது இம்மண் உருவாகிறது.

❖ மலைப் பகுதிகளில் அதிக அமிலத் தன்மையுடன் காணப்படும்.

❖ ஈரப்பதத்தைத் தக்க வைத்துக் கொள்ளாது.

**(ii) பரவல்**

❖ அசாம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரப் பகுதிகளில் பரவிக் காணப்படுகிறது.

**(உ) மலைமண்**

**(i) பண்புகள்**

❖ காலநிலை வேறுபாடுகளால் இம்மண் உருவாகிறது.

❖ பாஸ்பரஸ் மற்றும் சுண்ணாம்புச் சத்துகள் மிகக் குறைவாகக் காணப்படும்.

❖ அதிக காரத் தன்மை கொண்டதாக இம்மண் காணப்படும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



**(ii) பரவல்**

❖ ஜம்மு - காஷ்மீர், இமாச்சலப் பிரதேசம் போன்ற இடங்களில் பரவலாகக் காணப்படுகிறது.

---

**2. பல்நோக்குத் திட்டம் என்றால் என்ன? ஏதேனும் இரண்டு இந்தியப் பல்நோக்குத் திட்டங்கள் பற்றி எழுதுக.** QY - 2019 PTA-1

❖ அறிவியல் முறையில் ஆற்றுநீரைத் தேக்கி அந்நீரைப் பல்வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதே நீர்வள மேலாண்மைத் திட்டம் எனப்படும்.

❖ நீர்ப்பாசனம், நீர் மின் உற்பத்தி, குடிநீர், வெள்ளத் தடுப்பு மற்றும் நீர்வழிப் போக்குவரத்து போன்றவைகள் இதன் பல்வேறு நோக்கங்கள் ஆகும்.

❖ நீர்ப்பாசனம் மற்றும் நீர்மின்சக்தி ஆகியவை பெரும்பாலான பல்நோக்கு ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் ஆகும்.

❖ இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் பல்நோக்கத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

**எடுத்துக்காட்டாக,**

❖ தமிழ்நாட்டில் காவிரியின் குறுக்கே மேட்டூர் அணை கட்டப்பட்டு நீர்ப்பாசனம் மற்றும் நீர்மின்சக்தி ஆகியவை பெறப்படுகிறது.

❖ சட்லஜ் ஆற்றின் குறுக்கே பக்ராநங்கல் அணை கட்டப்பட்டு அதன் மூலம் பஞ்சாப் மற்றும் இராஜஸ்தான் மாநிலங்கள் பயன்பெறுகின்றன.

---

**3. தீவிர வேளாண்மை மற்றும் தோட்ட வேளாண்மையின் பண்புகளை வெளிக்கொணர்க.**

**(அ) தீவிர வேளாண்மையின் பண்புகள்**

❖ வேளாண்மையில் இயந்திரங்கள் மற்றும் பல்வேறு நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி உற்பத்தியை அதிகப்படுத்துவதாகும்.

❖ பூச்சிக் கொல்லிகள், களைக் கொல்லிகள் மற்றும் இரசாயண உரங்களை அதிகளவு பயன்படுத்தி அதிகபட்ச விளைச்சலைப் பெறுவது இதன் நோக்கம் ஆகும்.

**(ஆ) தோட்ட வேளாண்மையின் பண்புகள்**

❖ ஏற்றுமதி செய்யும் நோக்கத்துடன் இப்பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன.

❖ பெரும்பாலும் மலைச்சரிவுகளில் இவைகள் பயிரிடப்படுகின்றன.

❖ தேயிலை, காபி மற்றும் இரப்பர் போன்றவை இந்தியாவின் முக்கியத் தோட்டப் பயிர்களாகும்.

---

**4. நெல் மற்றும் கோதுமை பயிரிடுவதற்கு ஏற்ற புவியியல் சூழல்கள் பற்றி விவரி.** PTA-3

**நெல்**

❖ நெல் இந்தியாவின் பூர்வீகப் பயிர் ஆகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



- ❖ நெல் சிறப்பாக வளர்வதற்கு 24°C சராசரி வெப்பநிலையும் 150 செ.மீ ஆண்டு மழையளவும் தேவைப்படும்.
- ❖ வளமான களிமண் அல்லது வண்டல் மண்ணில் நெல் சிறப்பாக வளரும்.
- ❖ நெல் ஒரு அயன மண்டலப் பயிர் ஆகும்.

**(ஆ) கோதுமை**

- ❖ இந்தியாவின் இரண்டாவது முக்கிய உணவுப் பயிர் கோதுமை ஆகும்.
- ❖ இப்பயிரை விதைக்கும் போது 10 - 15°C வெப்பம் தேவைப்படும்.
- ❖ அறுவடையின் போது 20 - 25°C வெப்பம் தேவைப்படும்.
- ❖ வளமான கரிசல் மண்ணும் அதிகளவு நீரும் இருக்குமிடத்தில் கோதுமை சிறப்பாக விளையும்.

## GMQ, PTA அரசு தேர்வு வினா விடைகள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**1. பொன்புரட்சி எந்த வேளாண் பொருள் உற்பத்தியுடன் தொடர்புடையது?** செப்-2020 அ.மா.தே-23

அ) உருளைக்கிழங்கு ஆ) எண்ணெய் வித்துக்கள்

**இ) தேன்** ஈ) சணல்

### II. பொருத்துக செப்-2021

| I | | II | | | |
|---|---|---|---|---|---|
| 1. | சாம்பல் புரட்சி | அ | முட்டை | அ | (1)-(iii), (2)-(i), (3)-(iv), (4)-(ii) |
| 2. | வெள்ளிப் புரட்சி | ஆ | இறைச்சி | ஆ | (1)-(iv), (2)-(iii), (3)-(i), (4)-(ii) |
| 3. | சிவப்புப் புரட்சி | இ | தோல் | இ | (1)-(iv), (2)-(i), (3)-(ii), (4)-(iii) |
| 4. | பழுப்புப் புரட்சி | ஈ | உரங்கள் | ஈ | (1)-(ii), (2)-(iv), (3)-(i), (4)-(iii) |
| | | | **விடை** | **இ** | **(1)-(iv), (2)-(i), (3)-(ii), (4)-(iii)** |

### III. கோடிட்ட இடங்களை நிரப்புக.

**1. தேயிலை மற்றும் காபி செடிகள் பயிரிடப்படுவதற்கு ஏற்ற மண்________ ஆகும்.**

**விடை :** சரளை மண் GMQ-2019 PTA-3

### IV.சுருக்கமான விடையளிக்கவும்

**1. படிக்கட்டு முறை வேளாண்மை பற்றி சிறு குறிப்பு வரைக.** செப்-2021

- ❖ படிக்கட்டு வேளாண்மை மலை பிரதேசங்களில் பின்பற்றப்படுகிறது (எ.கா). தேயிலை, காபி



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



- சரியான பகுதிகள் படிக்கட்டுகளாக சிறிய சமமான நிலங்களாக மாற்றப்பட்டுள்ளது.
- இது மண்ணரிப்பை தடுக்கிறது.

**2. கலப்பு வேளாண்மை என்றால் என்ன?** செப்-2020 அ.மா.தே-23

- கலப்பு வேளாண்மை என்பது பயிரிடுதலுடன் கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு மீன்பிடிப்பு, தேனீ வளர்ப்புகள் போன்றவை உள்ளடக்கியதாகும். விவசாயிகளின் பல தேவைகளை இது பூர்த்தி செய்கிறது.

## V. விரிவாக விடையளிக்கவும்

**1. "மண் சீரழிவு" மற்றும் மண்வளப் பாதுகாப்பும், மண்வள மேலாண்மையும் குறித்து எழுதுக.** PTA-3

**மண் சீரழிவு:**

- மண் வளம் மண் அரிப்பால் பாதிப்படைவதையே மண் சீரழிவு என்கின்றோம்.
- இந்திய தொலை நுண்ணுணர்வு அறிக்கையின் படி 147 மில்லியன் ஹெக்டேர் நிலப்பரப்பு மண் அரிப்பால் பாதிப்படைந்துள்ளது.

**மண் வளப்பாதுகாப்பு**

- சம உயரம் உழுதல்
- பயிற்சுழற்சி முறை
- கரைகள் கட்டுதல்
- படிக்கட்டு வேளாண்மை
- பட்டை பயிரிடல்
- காற்றுக்கு எதிர்திசையில் மரங்கள் நடல்

போன்றவைகளை செயல்படுத்துவதன் மூலம் மண் வளத்தை பாதுகாக்கலாம்.

**மண் வள மேலாண்மை**

- காடுகளை உருவாக்குதல்
- அணைகள் மற்றும் தடுப்பணைகளை கட்டுதல்
- அதிக மேய்ச்சலை தடுத்தல்
- மேம்பட்ட பயிர்ச் சாகுபடி முறைகளை பின்பற்றுதல்

போன்றவைகள் மூலம் மண் வள மேலாண்மையை செயல்படுத்தலாம்.

## கூடுதல் வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்க.

**1. ஈரப்பதத்தை அதிக நேரம் தக்கவைக்கும் மண்**

அ) செம்மண் **ஆ) கரிசல் மண்**

இ) வண்டல் மண் ஈ) பாலை மண்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



**2. இந்தியாவில் இரண்டாவது முக்கிய நீர்பாசன முறை**

**அ) கால்வாய் பாசனம்** ஆ) ஏரி பாசனம்

இ) கிணற்றுப் பாசனம் ஈ) சொட்டு நீர்பாசனம்

**3. நம் நாட்டின் மிக மலிவான மற்றும் நம்பகமான பாசனமுறை**

அ) சொட்டு நீர் பாசனம் ஆ) கால்வாய் பாசனம்

**இ) கிணற்றுப் பாசனம்** ஈ) ஏரிப்பாசனம்

**4. இந்தியாவின் மிக பழமை பாசனமுறை**

அ) கிணற்றுப் பாசனம் **ஆ) ஏரிப்பாசனம்**

இ) கால்வாய் பாசனம் ஈ) இவற்றில் ஏதுமில்லை

**5. கம்பு பயிரின் பூர்வீக நாடு**

அ) தென் அமெரிக்கா ஆ) ஐரோப்பா

இ) சீனா **ஈ) ஆப்பிரிக்கா**

**6. இந்தியாவில் நெல் அதிகம் விளையும் மாநிலம்**

அ) தமிழ்நாடு **ஆ) மேற்கு வங்காளம்**

இ) ஆந்திரா ஈ) ஒடிசா

**7. உலக காபி உற்பத்தியில் இந்தியா வகிக்கும் இடம்**

**அ) 7** ஆ) 17

இ) 5 ஈ) 13

**8. உள்நாட்டு மீன்பிடித்தலில் முதலிடம் வகிக்கும் மாநிலம்**

அ) கர்நாடகம் ஆ) மத்திய பிரதேசம்

இ) குஜராத் **ஈ) ஆந்திரா**

**9. இந்தியாவின் மிக நீளமான அணை**

அ) மேட்டூர் ஆ) பக்ரா நங்கல்

**இ) ஹிராகுட்** ஈ) இடுக்கி

**10. உலகத் தேயிலை உற்பத்தியில் முதலிடம் வகிப்பது**

அ) இந்தியா **ஆ) சீனா**

இ) அமெரிக்கா ஈ) ஜப்பான்

## II. வேறுபடுத்துக.

**1. கிணற்றுப் பாசனம் மற்றும் ஏரிப்பாசனம்**

| கிணற்றுப் பாசனம் | ஏரிப்பாசனம் |
|---|---|
| கிணறு என்பது புவியில் **செங்குத்தாக தோண்டப்பட்ட பள்ளம்** அல்லது ஆழ்துளை மூலம் நிலத்தடி நீரை புவியின் | ஏரி என்பது புவியின் **மேற்பகுதியில் இயற்கையாக அல்லது மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு தாழ்வான நீர்** |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



| | |
|---|---|
| மேற்பரப்பிற்கு கொண்டு வருதல் ஆகும். | **தேங்கும்** பகுதியாகும். |
| இது நாட்டின் **மலிவான** மற்றும் **நம்பகமான** நீர்பாசன ஆதாரமாக உள்ளது. | இது இந்தியாவின் **மிகப் பழமையான** பாசன முறையாகும். |

## III. சுருக்கமான விடையளிக்கவும்.

**1. கால்வாய் பாசனம் என்றால் என்ன?**

- ❖ கால்வாய் பாசனம் இந்தியாவின் **இரண்டாவது மற்றும் முக்கியமான நீர்ப்பாசன** ஆதாரமாகும்.
- ❖ **தாழ்வான மற்றும் சமமான நிலப்பகுதி,** பருமன் மிகுந்த வளமான மண், வற்றாத நீர் மூலங்கள் மற்றும் அதிக நீர்ப்பிடிப்பு கொண்ட பகுதிகளில் கால்வாய் பாசனம் முக்கிய ஆதாரமாக உள்ளது.

**2. இந்தியாவின் நீர்ப்பாசன மூலங்களை பட்டியலிடுக.**

- ❖ கிணற்றுப் பாசனம்
- ❖ ஏரிப்பாசனம்
- ❖ கால்வாய் பாசனம்

**3. மையத்தெளிப்பு நீர்ப்பாசனம் என்றால் என்ன?**

- ❖ இவற்றிற்கான உபகரணத்தின் **மையப்பகுதியில் உள்ள கருவி சுழன்று** அவற்றைச் சுற்றியுள்ள பயிர்களுக்கு நீர்ப்பாசனத்தை அளிக்கிறது.
- ❖ இந்தியாவின் நவீன **நீர்ப்பாசன முறைகளில் முதன்மையானது** மையத் தெளிப்பு நீர்ப்பாசனம் ஆகும்.

## IV. விரிவான விடையளிக்கவும்.

**1. இந்திய விவசாயிகள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்களை விவரி.** மே -2022 PTA-4

**சிறிய மற்றும் குறுநில உடமை:**

- ❖ இந்தியாவில் மக்கள் அடர்த்தி மிகுந்த மற்றும் தீவிர பயிர் சாகுபடி செய்யும் மாநிலங்களில் சிறிய மற்றும் துண்டாக்கப்பட்ட நில உடமையாளர்கள் அதிகம் உள்ளனர்.

**அதிக செலவின் உள்ளீடுகள்:**

- ❖ அதிக விலையின் காரணமாக நல்ல தரமான விதைகள்
- ❖ சிறு - குறு விவசாயிகளுக்கு எட்டாக்கனியாக உள்ளது.

**வளமற்ற மண்:**

- ❖ இந்திய மண் பல்லாயிரம் ஆண்டுகளாக தொடர்ந்து வளம் கூட்டல் மற்றும் புதுப்பித்தல் செயல்பாடின்றி வேளாண்மைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதால் மண்ணின் வளம் குன்றியது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in


- இதனால் அதன் உற்பத்தித் திறன் பாதிக்கப்பட்டுள்ளது.

**நீர்ப்பாசன பற்றாக்குறை:**

- இந்தியாவில் மூன்றில் ஒரு பங்கு வேளாண் நிலப்பகுதியே பாசன வசதியைப் பெறுகிறது.
- மீதி இரண்டு பங்கு தரிசு நிலமாக உள்ளது.

**இயந்திரமயமாக்க பற்றாக்குறை:ஸ**

- நாட்டின் சில பகுதிகளில் வேளாண்மை பெரிய அளவில் இயந்திர மயமாக்கப்பட்டுள்ளது.
- பெரும்பாலான பகுதிகளில் மனிதர்களைக் கொண்டு எளிய மற்றும் பழமையான கருவிகள் மூலமே வேளாண்மை செய்யப்படுகிறது.


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



குடிமையியல்

# அலகு 1 இந்திய அரசியலமைப்பு

## கற்றலின் நோக்கங்கள்

- இந்திய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டதை அறிதல்
- இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை அறிதல்
- அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகளைப் புரிதல்
- அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகளை அறிதல்
- மத்திய, மாநில அரசுகளின் உறவுகள் மற்றும் அவசரநிலை பற்றிப் புரிதல்

IZ1TW

## பாடநூல் வினாக்கள்

## I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

**1. கீழ்க்காணும் வரிசையில் "முகவுரை" பற்றிய சரியான தொடர் எது?** ஆகஸ்ட்-22

அ) குடியரசு, ஜனநாயக, சமயச் சார்பற்ற, சமதர்ம, இறையாண்மை

ஆ) இறையாண்மை, சமதர்ம, சமயச் சார்பற்ற, குடியரசு, ஜனநாயக.

இ) இறையாண்மை, குடியரசு, சமயச் சார்பற்ற, சமதர்ம, ஜனநாயக.

**ஈ) இறையாண்மை, சமதர்ம, சமயச் சார்பற்ற, ஜனநாயக, குடியரசு.**

**2. இந்திய அரசியலமைப்பின் முகவுரை எத்தனை முறை திருத்தப்பட்டது?**

**அ) ஒருமுறை** ஆ) இருமுறை

இ) மூன்றுமுறை ஈ) மேற்கண்ட அனைத்தும்

**3. ஒரு வெளிநாட்டவர், கீழ்க்காணும் எதன் மூலம் இந்திய குடியுரிமை பெறமுடியும்?**

அ) வம்சாவளி ஆ) பதிவு

**இ) இயல்புரிமை** ஈ) மேற்கண்ட அனைத்தும்

**4. மாறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி.** PTA-2

அ) சமத்துவ உரிமை ஆ) சுரண்டலுக்கெதிரான உரிமை

**இ) சொத்துரிமை** ஈ) கல்வி மற்றும் கலாச்சார உரிமை

**5. கீழ்க்காண்பவற்றில் ஒன்ற, அடிப்படை உரிமையைப் பயன்படுத்துவதற்கு உதாரணம் இல்லை.** PTA-6

அ) கர்நாடகாவிலிருந்து, கேரளா பண்ணைகளில் வேலையாட்கள் பணிசெய்தல்.

ஆ) கிறித்துவ சமயக்குழு, தொடர்ச்சியாக, பள்ளிகளை அமைத்தல்.

இ) ஆண், பெண் இருபாலரும் அரசுப்பணிகளுக்கு சம ஊதியம் பெறுதல்

**ஈ) பெற்றோர்களின் பூர்வீக சொத்துகள் அவர்களது பிள்ளைகளுக்குச் செல்லுதல்.**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



**6. பின்வருவனவற்றுள் எந்த உரிமை டாக்டர். B.R அம்பேத்கர் அவர்களால் "இந்திய அரசியலமைப்பின் இதயம் மற்றும் ஆன்மா" என விவரிக்கப்பட்டது?** செப் - 2020 அ.மா.தே-23

அ) சமய உரிமை

ஆ) சமத்துவ உரிமை

**இ) அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை**

ஈ) சொத்துரிமை

**7. அடிப்படை உரிமைகள் எவ்வாறு நிறுத்திவைக்கப்பட முடியும்?**

அ) உச்சநீதி மன்றம் விரும்பினால்

ஆ) பிரதம மந்திரியின் ஆணையினால்

**இ) தேசிய அவசரநிலையின் போது குடியரசு தலைவரின் ஆணையினால்**

ஈ) மேற்கண்ட அனைத்தும்

**8. நமது அடிப்படை கடமைகளை ________ இடமிருந்து பெற்றோம்.** HY - 2019

அ) அமெரிக்க அரசியலமைப்பு ஆ) கனடா அரசியலமைப்பு

**இ) ரஷ்ய அரசியலமைப்பு** ஈ) ஐரிஷ் அரசியலமைப்பு

**9. எந்த பிரிவின் கீழ் நிதிநிலை அவசரநிலையை அறிவிக்க முடியும்?** மே - 2022

அ) சட்டப்பிரிவு 352 ஆ) சட்டப்பிரிவு 356

**இ) சட்டப்பிரிவு 360** ஈ) சட்டப்பிரிவு 368

**10. எந்தக் குழுக்கள் / கமிஷன்கள் மத்திய-மாநில உறவுகள் பற்றி பரிந்துரை செய்தன?**

1) சர்க்காரிய குழு 2) ராஜமன்னார் குழு 3) M.N வெங்கடாசலையா குழு கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடு.

அ) 1, 2 & 3 **ஆ) 1 & 2**

இ) 1 & 3 ஈ) 2 & 3

| II. கோடிட்ட இடங்களை நிரப்புக. | விடைகள் |
|---|---|
| 1. முதன்முதலில் அரசயிலமைப்பு எனும் கொள்கை ________ ல் தோன்றியது. QY - 2019 | **அமெரிக்க ஐக்கிய நாடுகளில்** |
| 2. அரசயில் நிர்ணய சபையின் தற்காலிக தலைவராக ________ தேர்ந்தெடுக்கப்பட்டார் | **டாக்டர் சச்சிதானந்தா சின்கா** |
| 3. இந்திய அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள் மற்றும் ஆண்டு ________. | **1949, நவம்பர் 26** |
| 4. ________ பேராணைகள் சட்டப்பிரிவு 32இல் குறிப்பிடப்படுகின்றன. | **நீதிப்** |
| 5. இந்திய குடிமக்களுக்கு அடிப்படை கடமைகள் ________ பிரிவின்கீழ் வழங்கப்பட்டுள்ளன. | **51A** |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



## III. பொருத்துக.

| I | | II | | விடைகள் | |
|---|---|---|---|---|---|
| 1. | குடியுரிமைச்சட்டம் | அ. | ஜவகர்லால் நேரு | 1. | இ |
| 2. | முகவுரை | ஆ. | 42வது அரசியலமைப்புச் சட்டத்திருத்தம் | 2. | அ |
| 3. | குறு அரசியலமைப்பு | இ. | 1955 | 3. | ஆ |
| 4. | செம்மொழி | ஈ. | 1962 | 4. | உ |
| 5. | தேசிய அவசரநிலை PTA-4 | உ. | தமிழ் | 5. | ஈ |

## IV.சுருக்கமான விடையளிக்கவும்

**1. அரசியலமைப்பு என்றால் என்ன?**

❖ ஒரு நாட்டின் நிர்வாகமானது **எந்த அடிப்படைக் கொள்கைளைச்** சார்ந்து அமைந்துள்ளது என்பதைப் பிரதிபலிக்கும் அடிப்படைச் சட்டமே அரசியலமைப்பு என்பதாகும்.

**2. குடியுரிமை என்பதன் பொருள் என்ன?** PTA-5

❖ "சிட்டிசன்" எனும் சொல் **"சிவிஸ்" எனும் இலத்தீன் மொழிச்** சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும்

❖ இதன் பொருள் **"ஒரு நகர அரசில் வசிப்பவர்"** என்பதாகும்.

**3. இந்திய அரசியலமைப்பால் வழங்கப்படும் அடிப்படை உரிமைகளைப் பட்டியலிடுக**

❖ சமத்துவ உரிமை

❖ சுரண்டலுக்கு எதிரான உரிமை

❖ கல்வி, கலாச்சார உரிமை

❖ சுதந்திர உரிமை

❖ சமய சார்பு உரிமை

❖ அரசியலமைப்புக்கு உட்பட்டு தீர்வு காணும் உரிமை

**4. "நீதிப்பேராணை" (Writ) என்றால் என்ன?**

❖ நீதிமன்றத்தால் வெளியிடப்படும் **கட்டளை அல்லது ஆணை** நீதிப் பேராணை எனப்படும்.

❖ சில சட்டங்களை **நிறைவேற்றாமல் தடுக்க** நீதிமன்றத்தால் வெளியிடப்படும் ஆணை இதுவாகும்.

**5. இந்தியாவில் செம்மொழிகள் எவை?** ஆகஸ்ட்-22 QY - 2019

❖ தமிழ்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

❖ சமஸ்கிருதம்
❖ தெலுங்கு
❖ மலையாளம்
❖ கன்னடம்
❖ ஒடியா

**6. தேசிய அவசரநிலை என்றால் என்ன?** PTA-6

❖ **போர், வெளிநாட்டவர் ஆக்கிரமிப்பு அல்லது ஆயுதம் ஏந்திய கிளர்ச்சி** இவற்றின் காரணமாக இந்தியாவின் பாதுகாப்பிற்கு ஆபத்து ஏற்பட்டால் தேசிய அவசர நிலை அறிவிக்கப்படும்.
❖ குடியரசுத் தலைவர் **சட்டப்பிரிவு 352-ன்படி** இந்த அவசர நிலையை அறிவிக்கலாம்.

**7. மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகளை மூன்று தலைப்புகளில் பட்டியலிடுக.**

❖ சட்டமன்ற உறவுகள்
❖ நிர்வாக உறவுகள்
❖ நிதி உறவுகள்

## V. பத்தி அளவில் விடையளிக்கவும்

**1. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.** செப் - 2021 ஆகஸ்ட்-22 PTA-1

❖ உலகில் எழுதப்பட்ட அரசியலமைப்பில் மிக நீளமான அரசியலமைப்பு இந்திய அரசியலமைப்பு ஆகும்.
❖ இதில் இடம் பெற்றுள்ள பெரும்பாலான கருத்துக்கள் பல்வேறு நாடுகளில் இருந்து பெறப்பட்டவை ஆகும்.
❖ இது நெகிழாத் தன்மையுடனும், நெகிழும் தன்மையுடனும் காணப்படுகிறது.
❖ கூட்டாச்சி முறை அரசாங்கத்தை ஏற்படுத்துகிறது.
❖ இந்தியாவை சமயச் சார்பற்ற நாடாக்குகிறது.
❖ சுதந்திரமான நீதித்துறையை வழங்குகிறது.
❖ 18 வயது நிரம்பிய அனைவருக்கும் வாக்குரிமையை வழங்குகிறது.

**2. அடிப்படை உரிமைகளைக் குறிப்பிடுக.** GMQ - 2019 HY - 2019

**(அ) சமத்துவ உரிமை**

❖ சட்டத்தின் முன் அனைவரும் சமம்.
❖ குடிமக்கள் அனைவருக்கும் சம வாய்ப்பு

**(ஆ) சுதந்திர உரிமை**

❖ சுதந்திரமான பேச்சுரிமை

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



- ❖ விரும்பிய இடத்தில் தொழில் செய்யும் உரிமை
- ❖ தனி மனித பாதுகாப்பு

**(இ) சுரண்டலுக்கு எதிரான உரிமை**

- ❖ கட்டாய வேலை, கொத்தடிமை முறை போன்றவற்றை ஒழித்தல்
- ❖ குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழித்தல்

**(ஈ) சமய சார்பு உரிமை**

- ❖ விரும்பிய சமயத்தைப் பின்பற்றும் உரிமை
- ❖ சமய விவகாரங்களை நிர்வகிக்கும் உரிமை

**(உ) கல்வி கலாச்சார உரிமை**

- ❖ சிறுபான்மையினரின் கலாச்சார பாதுகாப்பு
- ❖ சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களை நிறுவி நிர்வகிக்கும் உரிமை

**(ஊ) அரசியலமைப்புக்கு உட்பட்டு தீர்வு காணும் உரிமை**

- ❖ தனிப்பட்டவரின் அடிப்படை பாதிக்கப்டும் போது நீதிமன்றத்தை நாடும் உரிமை.

---

**3. அரசியலமைப்புக்கு உட்பட்டு தீர்வு காணும் உரிமை பற்றி எழுதுக.**

**(அ) ஆட்கொணர்வு நீதிப் பேராணை**

- ❖ சட்டத்திற்குப் புறம்பாக ஒருவர் கைது செய்யப்படுவதிலிருந்து இது பாதுகாக்கிறது.

**(ஆ) கட்டளையுறுத்தும் நீதிப் பேராணை**

- ❖ மனுதாரர் மனு தொடர்பான பணியினை சட்ட உதவியுடன் நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

**(இ) தடையுறுத்தும் நீதிப் பேராணை**

- ❖ கீழ் நீதிமன்றத்தின் சட்ட எல்லைகளை வரையறுக்க உதவும்.

**(ஈ) ஆவணக் கேட்பு பேராணை**

- ❖ உயர்நீதிமன்றம் தனக்குத் தேவையான ஆவணங்களைக் கேட்டு கீழ் நீதி மன்றங்களுக்கு இடும் ஆணை

**(உ) தகுதி முறை வினவும் நீதிப்பேராணை**

- ❖ சட்டத்திற்குப் புறம்பாகத் தகாத முறையில் அரசு அலுவலகத்தைக் கைப்பற்றுவதைத் தடுக்கும் பேராணை

---

**4. அடிப்படை உரிமைகளுக்கும் அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகளுக்கும் இடையேயான வேறுபாடுகளைக் குறிப்பிடுக.** QY - 2019 மே - 2022

| அடிப்படை உரிமைகள் | அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள் |
|---|---|
| ❖ அமெரிக்கா ஐக்கிய நாடுகளிலிருந்து பெறப்பட்டது. | ❖ அயர்லாந்து நாட்டிலிருந்து பெறப்பட்டது |
| ❖ இதை சுருக்கவோ, நீக்கவோ முடியாது. | ❖ இவை அரசுக்கு வழங்கும் |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



| | |
|---|---|
| | அறிவுறுத்தல்கள் ஆகும். |
| ❖ நீதிமன்றத்தால் செயல்படுத்த முடியும். | ❖ நீதிமன்றத்தால் கட்டாயப்படுத்த முடியாது. |
| ❖ சட்ட ஒப்புதல் பெற்றவை | ❖ அரசியல் ஒப்புதலைப் பெற்றவை |
| ❖ ஜனநாயகத்தை வலுப்படுத்தும் | ❖ இவற்றைப் பின்பற்றும் போது ஜனநாயகம் உறுதியாகிறது. |

## GMQ, PTA அரசு தேர்வு வினா விடைகள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**1. மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பான தவறான கூற்றைக் கண்டறியவும்** செப்-2021

அ) பொருளாதார வளர்ச்சி பற்றி அறிந்து கொள்ளப் பயன்படுகிறது.

ஆ) பணவீக்கம் மற்றும் பணவாட்டத்தின் சிக்கல்கள் பற்றி அறிய உதவுகிறது

**இ) பொருட்களின் தரத்தை அளவிடப் பயன்படுகிறது.**

ஈ) வாங்கும் திறனை மதிப்பீடு செய்ய உதவுகிறது.

**2. அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 14 வழங்குவது.** PTA-5

**அ) சட்டத்தின் முன் அனைவரும் சமம்** ஆ) பாகுபடுத்துவதைத் தடை செய்தல்

இ) சமவாய்ப்பளித்தல் ஈ) பட்டங்களை நீக்குதல்

### II.சுருக்கமான விடையளிக்கவும்

**1. ஏதேனும் இரு அடிப்படை உரிமைகளை விளக்குக.** PTA-3

❖ இந்திய அரசியலமைப்பு ஆறு அடிப்படை உரிமைகளை உள்ளடக்கியது.

❖ சமத்துவ உரிமை - சட்டத்தின் முன் அனைவரும் சமம்.

❖ சமயச்சார்பு உரிமை - விரும்பிய சமயத்தினை பின்பற்றுதல்.

**2. கட்டளையுறுத்தும் நீதிப்பேராணை - சிறுகுறிப்பு வரைக** PTA-1

❖ மனுதாரர் சட்ட உதவியுடன் தனது மனு தொடர்பான பணியினைச் சம்மந்தப்பட்ட துறையிலிருந்து நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

### III. விரிவான விடையளிக்கவும்

**1. இந்தியக்குடிமக்களின் அடிப்படைக் கடமைகளைப் பட்டியலிடுக.** PTA-4

❖ தேசிய கீதம், தேசியக்கொடி, மற்றும் தேசியச் சின்னங்களை மதிக்க வேண்டும்.

❖ இந்தியாவின் இறையாண்மையை பாதுகாத்தல் வேண்டும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



- தேசப்பாதுகாப்பிற்காக தேவைப்படும் போது தேசப்பணியாற்ற தயாராக இருத்தல் வேண்டும்.
- அனைவரிடமும் சகோதரத்துவத்தை வளர்த்தல் வேண்டும்.
- பாரம்பரிய கலப்பு கலாச்சரத்தை மதித்து நடத்தல் வேண்டும்.
- இயற்கை சுற்றுசூழலை பாதுகாத்து மேம்படுத்தி வனவிலங்குகள் வாழும் சூழலை ஏற்படுத்த வேண்டும்.
- பொதுச் சொத்துக்களை காக்க வேண்டும்.
- 6 வயது முதல் 14 வயதுள்ள குழந்தைகள் அனைவருக்கும் கல்வி பெறும் வாய்ப்பை ஏற்படுத்தி தர வேண்டும்.

## கூடுதல் வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்க.

**1. இந்திய அரசியலமைப்புச் சட்ட வரைவுக் குழுவின் தலைவர்**

(அ) ராஜேந்திரபிரசாத் **(ஆ) அம்பேத்கார்**
(இ) நேரு (ஈ) படேல்

**2. உலகில் எழுதப்பட்ட அரசியலமைப்புகளில் மிக நீளமானது**

**(அ) இந்திய** (ஆ) இங்கிலாந்து
(இ) அமெரிக்க (ஈ) சீனா

**3. இந்திய அரசியலமைப்பு எத்தனை பாகங்களை கொண்டுள்ளது**

(அ) 16 (ஆ) 18
(இ) 20 **(ஈ) 22**

**4. அரசியலமைப்பு கொள்கை முதன் முதலில் தோன்றிய நாடு**

(அ) இங்கிலாந்து (ஆ) ஜெர்மனி
(இ) இந்தியா **(ஈ) அமெரிக்கா**

**5. இந்தியாவில் உள்ள செம்மொழிகளின் எண்ணிக்கை**

(அ) 4 **(ஆ) 6**
(இ) 8 (ஈ) 10

**6. அரசியலமைப்பு சட்டத் திருத்தத்தை யார் கொண்டு வர முடியம்?**

**(அ) பாராளுமன்றம்** (ஆ) குடியரசுத் தலைவர்
(இ) அமைச்சரவை (ஈ) மாநில சட்டமன்ற உறுப்பினர்கள்

**7. மத்திய அரசின் அதிகாரப் பகிர்வு பட்டியலில் உள்ள மொத்த துறைகள்**

(அ) 80 (ஆ) 90
**(இ) 100** (ஈ) 110



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in


## II. சுருக்கமான விடையளி

**1. பிரதேச இணைவின் மூலம் ஒருவர் குடியுரிமைச் சட்டத்தின் படி எவ்வாறு குடியரிமை பெற முடியும்?**

- **பிற நாடுகள் பகுதிகள் இந்தியாவுடன் இணையும் போது** இந்திய அரசு அவ்வாறு இணையும் நாடுகளின் மக்களைத் தமது குடிமக்களைக் கருதி அவர்களுக்குக் குடியுரிமை வழங்கலாம்

**2. சுரண்டலுக்கெதிரான உரிமையின் பிரிவுகளை எழுதுக.**

**பிரிவு 23:**

- **கட்டாய வேலை, கொத்தடிமை முறை** மற்றும் **மனிதத்தன்மையற்ற** வியாபாரத்தைத் தடுத்தல்

**பிரிவு 24:**

- **தொழிற்சாலைகள்** மற்றும் **ஆபத்தான இடங்களில் குழந்தைத் தொழிலாளர்** முறையைத் தடுத்தல்.

## III. விரிவான விடையளிக்கவும்

**1. மத்திய மாநில உறவுகள் பற்றி விவரித்து எழுதுக**

**சட்டமன்ற உறவுகள்**

- மத்திய நாடாளுமன்றம், இந்தியா முழுவதற்கும் அல்லது இந்தியாவின் எந்த பகுதிக்கும் சட்டமியற்றும் கொண்டுள்ளது. இது இந்தியாவின் மாநிலங்களுக்கு மட்டுமின்றி யூனியன் பிரதேசங்களுக்கும் பொருந்தும்.
- மத்திய அரசுக்கு சொந்தமான பட்டியலில், சட்டமியற்றும் பிரத்யேக அதிகாரத்தை நாடாளுமன்றம் பெற்றுள்ளது.
- இந்திய அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணை, மத்திய, மாநில அரசுகளுக் கிடையேயான அதிகாரப் பகிர்வினைப் பற்றி கூறுகிறது. அவை மத்திய பட்டியல், மாநில பட்டியல், பொதுப்பட்டியல் என மூன்று பட்டியல்கள் முறையே 97.66.47 என்று அதிகாரத்தை வழங்கியுள்ளது.
- மாநில அரசுக்குச் சொந்தமான பட்டியில் சட்டமியற்றும் பிரத்தேய அதிகாரத்தை நாடாளுமன்றம் பெற்றுள்ளது.
- நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்கள் பொதுப்பட்டியியல் உள்ள அறைகள் மீது சட்டமியற்ற அதிகாரம் கொண்டுள்ளன. ஆனால் மத்திய அரசுக்கும், மாநில அரசுக்குமிடையே பொதுப்பட்டியில் உள்ள துறைகள் குறித்து சட்டமியற்றும் பொழுது முரண்பாடு ஏற்பட்டால் மத்திய அரசு இயற்றும் சட்டமே இறுதியானது.


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



**நிர்வாக உறவுகள்**

- ஒரு மாநில அரசின் நிர்வாக அதிகாரம் அதன் சொந்த மாநிலத்தில் மட்டுமே உள்ளது மற்றும் அம்மாநிலத்தில் மட்டுமே தனக்கான சட்டமியற்றும் தகுதியையும் பெற்றுள்ளது.
- அதே வேலையில், மத்திய அரசும், பிரத்தியேக நிர்வாகம் பெற்றுள்ளது. அவை,
- நாடாளுமன்றம் தொடர்பான விஷயங்களில் சட்டங்களை இயற்ற சிறப்பு அதிகாரம்.
- மாநில அரசுகள் செய்து கொள்ளும் உடன்படிக்கை
- ஒப்பந்தங்களை அங்கீகரிப்பது ஆகியனவாகும்.

**நிதி உறவுகள்**

- இந்திய அரசியலமைப்பு சட்டம் பகுதி 11 சட்டப்பிரிவு 268 இருந்து 293 வரை உள்ள பிரிவுகள் மத்திய மாநில அரசுகளின் நிதி சார்ந்த உறவுகளைப் பற்றி விளக்குகிறது.
- மத்திய-மாநில அரசுகள், அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் பலவகையான வரிகளை விதிக்கும் அதிகாரங்களைப் பெற்றுள்ளன.
- இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 280-ன் கீழ் குடியரசுத்தலைவரால் நியமனம் செய்யப்பட்ட நிதிக்குழு பரிந்துரையின் அடிப்படையில் மத்திய அரசால் சில வரிகள் விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு, மத்திய அரசாலும், மாநில அரசாலும் பிரிந்துக் கொள்ளப்படுகின்றன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in




குடிமையியல்

# அலகு 2 நடுவண் அரசு

## கற்றலின் நோக்கங்கள்

- குடியரசுத் தலைவர் மற்றும் துணைக் குடியரசுத் தலைவர் ஆகியோரின் அதிகாரங்களைப் பற்றி அறிதல்
- பிரதம அமைச்சர் மற்றும் அமைச்சரவை பற்றி அறிதல்
- மக்களவை மற்றும் மாநிலங்களவை பற்றி புரிந்துகொள்ளுதல்
- உச்ச நீதிமன்றம் பற்றி அறிதல்

E4PGO






Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



## பாடநூல் வினாக்கள்

## I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. **நடுவண் அரசின் அரசியலமைப்புத் தலைவர் ________ ஆவார்.**
   **அ) குடியரசுத் தலைவர்** ஆ) தலைமை நீதிபதி
   இ) பிரதம அமைச்சர் ஈ) அமைச்சர்கள் குழு
2. **ஒரு மசோதாவை நிதி மசோதாவா அல்லது இதர மசோதாவா என தீர்மானிக்கும் அதிகாரம் பெற்றவர்.**
   அ) குடியரசுத் தலைவர்
   ஆ) இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர்
   இ) நாடாளுமன்ற விவகார அமைச்சர்
   **ஈ) லோக் சபாவின் சபாநாயகர்**
3. **அமைச்சர்கள் குழு ஒட்டுமொத்தமாக இதற்குப் பொறுப்புடையவர்களாவர்.** PTA-1
   அ) குடியரசுத் தலைவர் **ஆ) மக்களவை**
   இ) பிரதம அமைச்சர் ஈ) மாநிலங்களவை
4. **லோக்சபா தேர்தலில் போட்டியிட தேவையான குறைந்தபட்ச வயது ________.**
   அ) 18 வயது ஆ) 21 வயது
   **இ) 25 வயது** ஈ) 30 வயது
5. **இந்திய மாநிலங்களின் எல்லைகளை மாற்றியமைக்கும் அதிகாரம் பெற்றவர்/பெற்ற அமைப்பு.** PTA-4
   அ) குடியரசுத் தலைவர் ஆ) பிரதம அமைச்சர்
   இ) மாநில அரசாங்கம் **ஈ) நாடாளுமன்றம்**
6. **கீழ்க்காணும் எந்த விதியின் அடிப்படையில் குடியரசுத் தலைவர் நிதி நெருக்கடி நிலையினை அறிவிக்கிறார்?**
   அ) சட்டப்பிரிவு 352 **ஆ) சட்டப்பிரிவு 360**
   இ) சட்டப்பிரிவு 356 ஈ) சட்டப்பிரிவு 365
7. **உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மற்ற நீதிபதிகளை நியமிப்பவர்.**
   **அ) குடியரசுத் தலைவர்**
   ஆ) இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர்
   இ) ஆளுநர்
   ஈ) பிரதம அமைச்சர்

| II. கோடிட்ட இடங்களை நிரப்புக. | விடைகள் |
|---|---|
| 1. ________ மசோதா குடியரசுத் தலைவரின் ஒப்புதல் இன்றி நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்த முடியாது. | **நிதி** |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



| | |
|---|---|
| 2. ________ நாட்டின் உண்மையான தலைவராகவும், நாட்டின் முக்கியச் செய்தி தொடர்பாளராகவும் செயல்படுகிறார். | **பிரதம அமைச்சர்** |
| 3. ________ அலுவல் வழியில் மாநிலங்களவையின் தலைவர் ஆவார். PTA-6 | **துணைக் குடியரசுத் தலைவர்** |
| 4. நாடாளுமன்ற இரு அவைகளிலும் உரையாற்றவும், கூட்டத் தொடரில் பங்கு கொள்ளவும் உரிமை பெற்றவர் ________. | **இந்திய அட்டர்னி ஜெனரல்** |
| 5. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மற்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது ________. GMQ - 2019 QY - 2019 | 65 |
| 6. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலன் ________ ஆகும். QY - 2019 | **உச்சநீதிமன்றம்** |
| 7. தற்சமயம், உச்சநீதிமன்றத்தில் தலைமை நீதிபதி உட்பட நீதிபதிகளின் எண்ணிக்கை ________. | 28 |

## III. சரியான கூற்றைத் தேர்வு செய்க.

1. i) மாநிலங்களவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 250.

   ii) இலக்கியம், அறிவியல், கலை, சமூக சேவை ஆகிய துறைகளில் சிறந்த அறிவு மற்றும் அனுபவம் பெற்ற 12 நபர்களை மாநிலங்களவைக்கு குடியரசுத் தலைவர் நியமிக்கிறார்.

   iii) மாநிலங்களவை உறுப்பினராவதற்கு 30 வயதுக்குக் குறைவாக இருத்தல் கூடாது.

   iv) மாநிலங்களவை உறுப்பினர்கள் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

   அ) i & iv சரியானவை ஆ) iii & iv சரியானவை

   இ) i & iv சரியானவை **ஈ) i, ii & iii சரியானவை**

2. i) உச்ச நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் மற்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது 62.

   ii) நடுவண் அரசின் மூன்றாவது அங்கம் நீதித்துறை ஆகும்.

   iii) அடிப்படை உரிமைகள் தொடர்பான வழக்குகள் உச்ச நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு அதிகாரங்களுக்கு உட்பட்டது.

   iv) உச்ச நீதிமன்றம் பிறப்பிக்கும் ஆணை இந்தியாவின் அனைத்துப் பகுதியிலுள்ள நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்தும்.

   **அ) ii & iv சரியானவை** ஆ) iii & iv சரியானவை

   இ) i & iv சரியானவை ஈ) i & ii சரியானவை



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



## IV. பொருத்துக.

| | | | | விடைகள் | |
|---|---|---|---|---|---|
| 1. | சட்டப்பிரிவு 53 | அ. | மாநில நெருக்கடிநிலை | 1. | இ |
| 2. | சட்டப்பிரிவு 63 | ஆ. | உள்நாட்டு நெருக்கடிநிலை | 2. | ஈ |
| 3. | சட்டப்பிரிவு 356 | இ. | குடியரசுத் தலைவரின் நிர்வாக அதிகாரங்கள் | 3. | அ |
| 4. | சட்டப்பிரிவு 76 | ஈ. | துணைக் குடியரசுத் தலைவரின் அலுவலகம் | 4. | உ |
| 5. | சட்டப்பிரிவு 352 | உ. | இந்திய அரசின் தலைமை வழங்குரைஞர் அலுவலகம் | 5. | ஆ |

## V. சுருக்கமான விடையளிக்கவும்

**1. இந்தியக் குடியரசுத் தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்?** செப் - 2020 HY - 2019

❖ குடியரசுத் தலைவர் **ஒற்றை மாற்று வாக்கு மூலம்** விகிதாச்சார பிரதிநிதித்துவத்தின்படி வாக்காளர் குழுமத்தால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அ.மா.தே-23

❖ வாக்காளர் குழுமம் என்பது **மாநிலங்களவை மற்றும் மக்களவையின்** தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் மாநில **சட்டமன்ற உறுப்பினர்கள்** ஆகியோரை உள்ளடக்கியதாகும். PTA-1

**2. நடுவண் அரசின் அமைச்சர்கள் தரநிலைகளின்படி எவ்வாறு வகைப்படுத்தப் பட்டுள்ளனர்?**

❖ காபினெட் அமைச்சர்கள்

❖ இராசாங்க அமைச்சர்கள்

❖ இணை அமைச்சர்கள்

**3. உச்சநீதிமன்ற நீதிபதி ஆவதற்கான தகுதிகள் யாவை?** மே - 2022

❖ **இந்தியக் குடிமகனாய்** இருத்தல் வேண்டும்.

❖ **ஐந்து ஆண்டுகள்** உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாகப் பணியாற்றி இருத்தல் வேண்டும்.

❖ **பத்து ஆண்டுகள்** உயர்நீதிமன்ற வழக்குரைஞராகப் பணியாற்றி இருத்தல் வேண்டும்

**4. நிதி மசோதா குறிப்பு வரைக.** GMQ - 2019

❖ **மக்களவையில் மட்டுமே** நிதி மசோதாவினை அறிமுகப்படுத்த முடியும்.

❖ இதை **திருத்தம் செய்யவோ அல்லது நிராகரிக்கவோ,** மாநிலங்களவைக்கு அதிகாரம் இல்லை.

❖ மாநிலங்களவை **14 நாட்களுக்குள் ஒப்புதல் வழங்கவில்லை** என்றால் இம் மசோதா ஒப்புதல் பெறாமலே சட்டமாகிவிடும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



**5. இந்திய அரசின் தலைமை வழக்குரைஞரின் சிறப்பு அதிகாரங்கள் இரண்டினைப் பட்டியலிடுக.** QY - 2019

- ❖ குறிப்பிட்ட சட்ட விவகாரங்களில் இந்திய அரசாங்கத்திற்கு **ஆலோசனை வழங்க** முடியும்.
- ❖ இந்தியாவில் உள்ள **அனைத்து நீதிமன்றங்களிலும்** வழக்காடும் உரிமை இவருக்கு உண்டு.
- ❖ **நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கிடைக்கக்கூடிய** அனைத்து சலுகைகளும் இவருக்கு உண்டு.

## VI.விரிவான விடையளி

**1. இந்தியக் குடியரசுத் தலைவரின் சட்டமன்ற மற்றும் நீதி அதிகாரங்களை விவரி?** செப் - 2021

- ❖ நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடர் இவரின் உரையுடனே தொடங்கும்.
- ❖ ஒவ்வொரு ஆண்டும் முதற் கூட்டத்தொடரை இவரே உரையுடன் தொடங்கி வைப்பார்.
- ❖ ஆண்டுக்கு இருமுறை நாடாளுமன்றத்தை கூட்டும் அதிகாரம் இவருக்கு உண்டு.
- ❖ இவரின் அனுமதி பெற்ற பின்னரே எந்த ஒரு மசோதாக்களும் சட்டமாகின்றன.
- ❖ நிதி மசோதாவை குடியரசுத் தலைவரின் ஒப்புதல் இன்றி நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்ய முடியாது.
- ❖ மக்களவையை அதன் பதவிக் காலம் முடியும் முன்னரே அதனை கலைக்கும் அதிகாரம் இவருக்கு உண்டு.
- ❖ கலை, இலக்கியம், அறிவியல், விளையாட்டு மற்றும் சமூகப் பணிகளில் சிறந்து விளங்கும் 12 நபர்களை இவர் மாநிலங்களவை நியமன உறுப்பினர்களாக இவர் நியமிக்கலாம்.

**நீதி அதிகாரங்கள்**

- ❖ நீதிமன்றத்தால் தண்டனை பெற்ற ஒருவரின் தண்டனையை குறைக்க முடியும்.
- ❖ அதே தண்டனையை ஒத்திவைக்கவும், விடுவிக்கவும், மன்னிப்பு வழங்கவும் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

**2. இந்திய உச்ச நீதிமன்றத்தின் நீதிவரையறைகள் ஏதேனும் மூன்றினை விளக்குக.** PTA-5

**(அ) தனக்கே உரிய நீதி வரையறை**

- ❖ உச்ச நீதிமன்றத்திற்கு நேரடியாக வரும் வழக்குகள் தனக்கே உரிய நீதி வரையறைக்கு உட்பட்டவை ஆகும். அவைகள்,
- ❖ இந்திய அரசிற்கும் ஒரு மாநிலம் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு இடையிலான சிக்கல்கள்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

- மாநிலங்களுக்கு இடையிலான சிக்கல்கள்.
- அடிப்படை உரிமைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்வான சிக்கல்கள் ஆகியவை உச்ச நீதிமன்றத்தின் தனக்கே உரிய நீதி வரையறைக்குப்பட்டதாகும்.

**(ஆ) மேல் முறையீட்டு நீதிவரையறை**

- உச்சநீதிமன்றம் நாட்டின் இறுதி மேல் முறையீட்டு நீதிமன்றமாக விளங்குகிறது.
- மாநில உயர் நீதி மன்றங்கள் உரிமையியல், குற்றவியல் அரசியலமைப்பு வழக்குகள் மீதான தீர்ப்புகளுக்கு எதிரான மேல் முறையீட்டு வழக்குகளை உச்ச நீதிமன்றம் விசாரிகின்றது.

**(இ) ஆலோசனை நீதிவரையறை**

- பொது முக்கியத்துவம் வாய்ந்த எந்தவொரு சட்டம் அல்லது உண்மை மீதான உச்ச நீதிமன்றத்தின் கருத்தினைப் பெற அரசியலமைப்புச் சட்டம் குடியரசுத் தலைவருக்கு அதிகாரத்தினை வழங்குகிறது.

---

**3. இந்தியப் பிரதம அமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள் யாவை?** PTA-2 மே - 2022

- அமைச்சர்களுக்கு துறைகளை ஒதுக்கீடு செய்கிறார்.
- அமைச்சரவை கூட்டத்திற்கான தேதி, நிகழ்ச்சி நிரலை முடிவு செய்வார்.
- அமைச்சரவைகூட்டம் நடைபெறாத காலத்தில் தன் அமைச்சரவை சகாக்களோடு கலந்தாலோசிக்கலாம்.
- பல்வேறு துறைகளின் பணிகளை மேற்பார்வையிடுவார்.
- அமைச்சரவையின் முடிவுகளை குடியரசுத் தலைவருடன் விவாதிக்கின்றார்.
- குடியரசுத் தலைவருக்கும், அமைச்சரவைக்கும் இடையே பாலமாக செயல்படுவார்.
- பிரதம அமைச்சரே நாட்டின் உண்மையான தலைவர், அவரே நாட்டின் முக்கிய செய்தி தொடர்பாளர்.
- சர்வதேச மாநாடுகள் அனைத்திலும் இந்திய நாட்டின் பிரதிநிதியாக பிரதமர் பங்கு கொள்கிறார்.

---

**4. நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளை திறனாய்வு செய்க.**

இந்திய நாடாளுமன்றம் கீழ்கண்ட அதிகாரங்களை பெற்றிருக்கிறது. அவை முறையே

- சட்டமியற்றுதல்
- நிர்வாகத்தினை மேற்பார்வையிடுதல்
- வரவு-செலவு திட்டத்தினை நிறைவேற்றுதல்
- பொதுமக்களின் குறைகளைப் போக்குதல்
- சர்வதேச உறவுகளைப் பேணுதல்
- உள்நாட்டுக் கொள்கைகளை வகுத்தல்

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8248737898 www.CBSEtips.in



**இந்திய நாடாளுமன்றம் கீழ்கண்ட செயல்பாடுகளை மேற்கொள்கிறது**

- ❖ குடியரசுத் தலைவர் மீதான அரசியல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கிறது.
- ❖ உச்ச மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகள், தலைமை தேர்தல் ஆணையர், இந்தியத் தலைமை கணக்கு தணிக்கையாளர் ஆகியோரை சட்ட விதிமுறைப்படி பதவி நீக்கம் செய்யவும் அதிகாரம் பெற்றுள்ளது.
- ❖ மாநிலங்களின் எல்லைகளை மாற்றி அமைத்திட நாடாளுமனத்திற்கே அதிகாரம் உண்டு.

## GMQ, PTA அரசு தேர்வு வினா விடைகள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**1. நாடாளுமன்ற மேலவைக்கு தமிழகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை** **PTA-3**

அ)16 ஆ)17 **இ)18** ஈ)19

### II.சுருக்கமான விடையளிக்கவும்

**1. மக்களவையின் சபாநாயகர் பற்றி குறிப்பு வரைக.** **PTA-4**

- ❖ மக்களவையைத் தலைமை ஏற்று நடத்துபவர்இவராவார்.
- ❖ மக்களவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
- ❖ நாடாளுமன்ற இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்திற்கு தலைமை வகிப்பார்.

**2. மேல்முறையீட்டு நீதிவரையறை என்றால் என்ன?** **PTA-3**

- ❖ உச்ச நீதிமன்றமே நாட்டின் இறுதி மேல்முறையீட்டு நீதிமன்றம் ஆகும்.
- ❖ மாநில உயர்நீதிமன்றங்கள் வழங்கும் தீர்ப்புகளுக்கு எதிரான மேல்முறையீட்டு வழக்குகளை இது விசாரிக்கும்.
- ❖ வழக்குகளில் மேலும் சட்ட விளக்கம் தேவைப்படும் என்று உயர்நீதிமன்றம் கருதினால் மட்டுமே அவ்வழக்குகளை உச்சநீதிமன்றம் முன் கொண்டு செல்ல முடியும்.

## கூடுதல் வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்க

